
GOKULAM

கோகுலம்

ஜூன் 2002

ரூ.6/-





ஜில் விளையாட்டு
பக்.40



சிங்கம், புலி பாருங்க;
ஆனால் ரொம்ப சாதுங்க!

வண்ணம் தீட்டுங்கள்





"உன் தம்பி ஜான் நல்லா வளர்ந்திட்டானாமே?"

"ஆமாம் இப்ப முழம் ஆயிட்டான்!"


- பொன்.குமார், சேலம்.

ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்





போட்டோவுக்கு போஸ் கொடுக்கும்போது கொஞ்சம் சிரிக்கக் கூடாதா?



விடை :
1. சிங்கத்தின் வால், 2. நாக்கு
3. சிறுமியின் சட்டை 4. ரிப்பன் 5. துப்பாக்கி





கோகுலம்

மலர் : 20 இதழ் : 5

ஜூன் 2002

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்



விரதம் இருந்த கருமிகள்

ராமுவும் மரகதமும் கருத்து ஒருமித்த கருமி தம்பதிகள். எச்சில் கையால் காகத்தை விரட்டக் கூட மாட்டார்கள். விருந்தினர் யார் வந்தாலும் காய்ச்சல் என்று மரகதம் படுத்துக் கொள்வாள். ராமுவோ வீட்டில் அரிசி இல்லை, பருப்பு இல்லை என்று புலம்பியபடி அவர்களுக்கு எதுவும் தராமல் அனுப்பி விடுவான். இருவருக்கும் 'ஸ்ரீமதி கருமி', 'ஸ்ரீமான் கருமி' பட்டமே கொடுக்கலாம்!

ஒரு நாள் ராமுவின் பள்ளித் தோழன் சோமு வெகு தொலைவில் இருந்து வந்தான். "வா சோமு. எப்படி இருக்கே? உனக்கு இன்னிக்குச் சாப்பாடு போட முடியாத நிலையில் இருக்கேன். நானும் மரகதமும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் சோம வார விரதம் இருப்போம். இன்று முழுவதும் ஒன்றும் சாப்பிட மாட்டோம். சமைக்கவும் மாட்டோம்?" என்றான் ராமு.

"பரவாயில்லை ராமு. என் குழந்தைக்குக் காது குத்து நிகழ்ச்சி வைத்திருக்கேன். அதுக்கு அழைக்கத்தான் வந்தேன்" என்றான் சோமு.

"சோமு, நீ திண்ணையில் படுத்துக்க. எங்களுக்குப் பூஜை இருக்கு" என்றபடி கதவை பூட்டிக் கொண்டான் ராமு.

சோமுவுக்குப் படுத்தவுடன் தூக்கம் வந்தது. திடீரென்று பாத்திரம் உருட்டும் சத்தம் கேட்டு கண்விழித்தான் சோமு. உள்ளே இருந்து சாம்பார் மணம் வந்தது. 'அடப்பாவி! நீ கஞ்சன்னு கேள்விபட்டிருக்கேன். ஆனால் இவ்வளவு கஞ்சன்னு நினைக்கலே. இப்படி வெளியில் படுக்கவச்சிட்டு சாப்பிடறியே' என்று மனம் வருந்தினான் சோமு.

மறுநாள் விடிந்ததும் "ராமு, என்ன நேற்றிரவு பாத்திரம் உருட்டும் சத்தம் கேட்டுது?" என்றான் சோமு.

"சோமு, நீ ஏதாவது கனவு கண்டிருப்பே. பத்து வருஷமா ஒவ்வொரு திங்கட் கிழமையும்



நாங்க இநத விரதம் இருக்கோம்" என்று ராமு கூற மரகதமும் தலையாட்டினாள்.

மறுவாரம் காதுகுத்து விழாவுக்கு ராமுவும் மரகதமும் சென்றனர். அங்கு விதவிதமான பதார்த்தங்களை ஏற்பாடு செய்திருந்தான் சோமு.

"ஏங்க, ஏகப்பட்ட உணவு தயார் பண்ணி வச்சிருக்காங்க. தேவையான அளவுக்குத் திருப்தியா சாப்பிட்டுடுவோம்" என்று மெல்ல கிசுகிசுத்தாள் மரகதம்.

"ஆமாம்... ஆமாம்.. நம்மால் இதை எல்லாம் நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது" என்று கூறினான் ராமு.

இருவரும் எப்பொழுது பந்தி போடுவார்கள் என ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.


பந்தி ஆரம்பித்தது. "ராமு, மரகதம் இது உங்க வீடு மாதிரி. எல்லோருக்கும் பரிமாறுங்க. எனக்குக் கொஞ்சம் வேலை இருக்குது"என்றான் சோமு.

இருவரும் நாக்கில் நீர் வழிய பதார்த்தங்களைப் பரிமாறினார்கள். எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும் சோமுவின் மனைவி ராமுவையும் மரகதத்தையும் சாப்பிட அழைத்தாள். இருவரும் சந்தோஷமாக வந்தனர்.

"உனக்கு விஷயம் தெரியாதா கமலா? இன்னிக்குத் திங்கட் கிழமை. ராமுவும் மரகதமும் பத்து வருடங்களாகச் சிவனுக்கு விரதம் இருக்காங்க. அதனால இன்னிக்கு எதுவும் சாப்பிட மாட்டாங்க" என்றான் சோமு.

இருவருக்கும் பேய் அறைந்தது போல் இருந்தது. ஒரு பக்கம் பசி; இன்னொரு பக்கம் ஏமாற்றம். இருவரும் தங்கள் தவறை அப்பொழுதுதான் புரிந்து கொண்டனர்.

— பா. கவிதா,
பன்னிரெண்டாம் வகுப்பு,
ஜனக்புரி,
புதுடெல்லி.



பரிசு ரூ.100/-



எல்லோரும் ஜோரா சிரிங்க!

பரிசு ரூ.50/-

''ஏன், அந்த ஜோசியக்காரர் மேல கோபப்படுறீங்க?''

''பின்ன என்னங்க, 'ஏழரை நாட்டுச் சனி பிடிச்சிருக்கு'ன்னு சொல்றாரு. 'எந்தெந்த நாடு'ன்னு கேட்டா, திருதிருன்னு முழிக்கிறாரு!''

- தஞ்சை எம். ஷண்முகராஜா



பரிசு ரூ.25/-

''டேய் பாலு, வேலு! ரெண்டு பேரும் சேர்ந்து கடைக்குப் போய் 'தனியா' வாங்கிட்டு வாங்க...''

''என்னம்மா குழப்பறே நீ! சேர்ந்து போகச் சொல்றே; ஆனா தனியா வாங்கிட்டு வரச் சொல்ற...''

- யோகானந்தம்



பரிசு ரூ.15/-



''எதிர்தரப்பு சாட்சி, கோர்ட்டிலே நம்ம பக்கம் 'பல்டி' அடிக்கிறதாச் சொன்னானே! 'பல்டி' அடிச்சானா...?''

''பல்டி' மட்டுமா அடிச்சான்? அதுக்கு முன்னாடி, எல்லோரும் ஜோரா ஒரு தடவை கை தட்டுங்கன்னு வேற சொல்லிட்டான்...!''

- கலை நண்பன்

ஜோக்ஸ் எழுதுங்கள், பரிசுகளை வெல்லுங்கள்!

பரிசு ரூ.15/-



''உன் பிறந்த நாளுக்கு ஒரு பேனா பிரஸண்ட் பண்ணேனே, அது நல்லா எழுதுதா, கண்ணா?''

''அடப் போ, பாட்டி... அது எங்கே எழுதுது. அதை வைச்க நான்தான் என் கையால கஷ்டப்பட்டு எழுதறேன்!''

- தஞ்சை ஜி.கே. ராம்



கோடை விடுமுறைப் போட்டி - II

தீவுகளைக் கண்டுபிடியுங்கள்!

இங்கு ஆறு தொகுதிகளாகக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள குறிப்புகளுக்கு ஏற்ற விடையை எழுதுங்கள். விடைகளில் வட்டமிட்டிருக்கும் எழுத்துகளைச் சரியாகச் சேர்த்தால் தீவுகளைக் கண்டுபிடித்து விடலாம். ஆறு தீவுகளையும் எழுதி, முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் குறிப்பிட்டு அனுப்புங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தரவேண்டும். சரியான விடை எழுதிய 10 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி : 15.6.2002

I

1. உயிர்களிடத்தில் இது வேண்டும். ○ ○ □
2. இதை வைத்து விளையாடலாம். □ ○ □
3. நரியை இதுக்கு உதாரணமாகச் சொல்வார்கள். ○ □ □ □ □
4. கார்த்திகைக்கு அடுத்த மாதம். ○ □ □ □

II


1. இது காய்ந்தால் சுக்கு ○ □ □
2. கண்ணகியின் கணவர் □ □ ○ □
3. ரமாவுக்கு ராமு அண்ணன் என்றால் ராமுவுக்கு ரமா □ ○ ○

III

1. சூரியன் ○ □ □ □
2. நட்சத்திரங்களில் ஒன்று ○ □ ○
3. கௌரவ ஆஸ்கார் விருது வாங்கிய இந்தியத் திரைப்பட இயக்குனர் □ □ □ □ □ ○
4. பூனைக்குப் பகை □ ○
5. பழங்கால இசைக் கருவிகளில் ஒன்று ○ □

IV

1. சொல்வதைச் சொல்லும் இது ○ □
2. வண்டுகளின் ஒலி ○ □ □ □ □
3. துள்ளியோடும் அழகான பிராணி □ ○



ஆசிரியர், கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கள், சென்னை - 97

4. முக்கனிகளுள் ஒன்று

5. கழுகு என்பதை இப்படியும் கூறலாம்.

V 1. ஞாபகமின்மை

2. மழைநீர் இறுதியில் இதில் சங்கமமாகும்

3. குடகுமலையில் உற்பத்தியாகும் நதி

4. முட்டையிட்டுப் பாலூட்டும் விலங்கு


5. தாவரங்கள் நீரும் சத்தும் உறிஞ்சும் பகுதி

VI அமெரிக்க கட்டிடத்தில் விமானம் மோதிய நகரம்

வலை பின்னும் பூச்சி

ஆஸ்திரேலிய கரடி

ஒலியைக் கேட்கும் உறுப்பு



கடலில் சங்கமிக்கும் மழைத்துளி!

கொளுத்தும் கோடை வெயிலில் வெளியே தலைகாட்டவே முடியாது. அப்புறம் எப்படி விளையாடுவது? என்று நீங்கள் கவலைப்படுவது புரிகிறது. வீட்டுக்குள்ளேயே அமர்ந்து 40ஆம் பக்கத்தில் வெளியாகி இருக்கும் விளையாட்டை சந்தோஷமாக விளையாடலாம். விளையாடி முடித்ததும் தண்ணீரில் நனைந்த திருப்தி கிடைக்கும்.

எப்படி விளையாடுவது?

குறைந்தது இருவர் இந்த விளையாட்டுக்குத் தேவை.
பகடை வேண்டும்.
வண்ண பட்டன்கள்

விதிமுறைகள் :

1. தாயம் போட்டு ஆரம்பிக்க வேண்டும்.
3. நீர் ஆவியாகிறது. எனவே குளிர்ந்த மேகத்துடன் மிதந்து 5க்குச் செல்லவும்.
7. மழை வந்துவிட்டது. ஒருமுறை ஆட்டத்தைத் துறக்கவும்.
10. அடடா! மீன் வாயில் விழுந்தீர்கள். இரண்டு கட்டம் பின்னே செல்லுங்கள்.
13. குளிர்ந்த மேகம். 3 கட்டங்கள் முன்னோக்கிச் செல்லவும்.
18. விளை நிலத்தில் விழுந்ததால் சகதி பட்டுவிட்டது. 7க்குச் சென்று மழையில் நனையுங்கள்.
21. ஒரு ஆட்டம் கிடையாது.
26. சிறு தூறல் விழுகிறது. ஜாலி. வேகமாக 28க்குச் செல்லவும்.
29. தண்ணீர் பானைக்குள் விழுந்தீர்கள். 2 கட்டம் பின்னோக்கிச் செல்லவும்.
35. ஆலைக் கழிவினால் அசுத்தமாகி விட்டீர்கள். மீண்டும் ஆரம்ப கட்டத்துக்குப் போய், தாயம் போட்ட பிறகு முன்னேறவும்.
42. ஆற்றில் வெள்ளம் அதிகரித்து விட்டது. 38க்குச் செல்லவும்.
43. வெற்றி! வெற்றி! கடலில் சங்கமிக்கவும்.


மைக்கேல் ஓவன்
ENGLAND
10
ரிவால்டோ



ரசிகர்களைப் 'பைத்தியம் பிடிக்க வைக்கும் விளையாட்டு' என்று கூறப்படும் உலகக் கோப்பைக் கால்பந்து திருவிழா இம்மாதம் 31ம் தேதி துவங்க இருக்கிறது. ஜூன் 30ம் தேதிவரை நடக்கும் இந்தத் திருவிழா இப்போதே கோடிக்கணக்கான ரசிகர்களை ஏக்கத்தில் வைத்திருக்கிறது. நிறைய டென்ஷனோடு, தவம் கிடக்கின்றனர் ரசிகர்கள்.

"வெறி கொண்ட ரசிகர்கள் இந்த விளையாட்டுக்கு அதிகம்தான். ஒரு அணி வெல்வதும்; ஒரு அணி தோற்பதும் இயற்கைதானே... இதில் ரசிகர்கள் சமாதானமாக வேண்டும், அவர்களின் மனப்பான்மை, வன்முறையை நோக்கிப் போகக் கூடாது" என்கிறார் இங்கிலாந்தின் முன்னாள் கோச் ஒருவர்.

இதற்காகவே ஏகப்பட்ட கட்டுப்பாடுகளுடன் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கவனிக்க, போட்டியை நடத்தும் தென் கொரியாவும் ஜப்பானும் இறங்கிவிட்டன.

முதன்முறையாக இந்தக் கால்பந்து திருவிழா ஆசியாவில் நடக்கும்போது இந்திய அணி இடம் பெறவில்லையே என்ற கவலை நமக்கு ஏற்பட்டாலும் இந்தப் போட்டியில் நடுவராகப் பங்கேற்கும் வாய்ப்பு தமிழகத்தைச் சேர்ந்த சங்கருக்குக் கிடைத்திருப்பது கொஞ்சம் மனத்தை இதமாக்குகிறது.

முப்பத்திரண்டு அணிகள் மோதும் இந்த ஆட்டம் 'ஏ'யிலிருந்து 'ஹெச்'வரை எட்டுப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தென் கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள 20 ஸ்டேடியங்களில் இவை 'லீக்' முறையில் ஆடிய பிறகு பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் கால் இறுதி, அரையிறுதி, இறுதிக்குத் தகுதி பெறும்.

கால்பந்து திருவிழா!





"அதிகமான அணிகள் களத்திலிருந்தாலும் அர்ஜென்டினா, ஃபிரான்ஸ், இத்தாலி மற்றும் எங்கள் நாடு (இங்கிலாந்து) இவற்றில் ஒன்றுதான் உலக கோப்பையை வெல்லும் சாத்தியம் இருக்கிறது" என்கிறார் இங்கிலாந்தின் தற்போதைய கோச் ஸ்வன் கோரன் எரிக்ஷன்.

"இங்கிலாந்தில் நல்ல ஆட்டக்காரர்கள் இருக்கிறார்கள்; ஆனாலும் அவர்களுக்கு உலக கோப்பையை வெல்லும் சாமர்த்தியம் இல்லை" என்கிறார் இன்னொரு கோச்!

உலக கோப்பை போட்டியில் அணிகள் மண்ணைக் கவ்வினால்

ஓவியப் போட்டி

இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு 'வாழை மரம்'. வாழைமரம் தனியாக இருக்கலாம்; தோட்டமாக இருக்கலாம்; காய்த்து, பழுத்து, பூவிட்டு, சிறுகன்றுகளுடன் என்று எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். படம் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முழு முகவரி தரவும்.

கடைசி தேதி : **8.6.2002**

பந்தாடப்படுவது விளையாட்டு வீரர்களல்ல; கோச்தான். வெற்றிக்கு கோச்சுகளின் பங்கு உண்டு. பிரேசில் கோச் லூயிஸ் பெலிப் ஸ்கோலாரி சொல்வதைக் கேளுங்கள்:

"ஃபிரான்ஸ், அர்ஜென்டினா, நாடுகள் வலுவாக இருந்தாலும் கோப்பையை வெல்லப்போவது நாங்கள்தான். இது உறுதி. நாங்கள் வெல்லவில்லையென்றால் ரசிகர்கள் என்னைக் குடைந்து எடுத்துவிடுவார்கள்."

உருகுவே நாட்டில் 1930ம் ஆண்டில் தொடங்கப்பட்ட உலக கோப்பைக் கால்பந்து போட்டியிலிருந்து கடைசியாக நடந்த 1998வரை பிரேசில் மட்டுமே நான்கு முறை (58, 62, 70, 94) கோப்பையைக் கைப்பற்றியிருக்கிறது. பெரும்பாலான போட்டிகளில் இறுதிவரை அதிக முறை சென்ற அணியும் பிரேசில் மட்டுமே!

பிரேசிலைப் போலவே உருகுவே, அர்ஜென்டினா, ஜெர்மனி, ஃபிரான்ஸ் போன்ற அணிகளும் வலுவாக இருந்தாலும் சொந்த மண்ணில் விளையாட இருப்பதால் யானை பலத்தில் இருக்கிறது தென் கொரியா. "அந்த அணியையும் புறக்கணித்துவிட முடியாது" என்கிறார் கால்பந்து விமர்சகர் ஒருவர்.

எப்படியோ ஜூன் முப்பதாம் தேதி நடக்கும் இறுதி போட்டியில் தெரிந்துவிடும் வெல்வது எந்த அணியென்று.

* சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (FIFA) முதன்முதலாக உலக கோப்பை போட்டியை நடத்த நினைத்தபோது விடாப்பிடியாக தங்கள் நாட்டில்தான் நடத்த வேண்டும் என்று களத்தில் குதித்தது உருகுவே. 'எங்கள் நாட்டின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் சிறப்பாக அது அமையும்' என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க உருகுவே நாட்டில் உலக கோப்பை போட்டி நடத்த அனுமதிக்கப்பட்டது.

* இரண்டு நாடுகள் சேர்ந்து உலக கோப்பைப் போட்டியை நடத்துவது இதுதான் முதன்முறை. அதுவும் கீரியும் பாம்புமாக இருந்த ஜப்பானும் தென்கொரியாவும் இந்தப் போட்டிக்காக இணைந்திருப்பது ஆச்சர்யம்!

* தற்போதைய கால்பந்து உலக கோப்பையை வடிவமைத்தவர் இத்தாலியைச் சேர்ந்த சில்வியோ கஸயா என்பவர்.

* கால்பந்து வரலாற்றில் முதல் கோல் போட்டவர் ஃபிரான்ஸைச் சேர்ந்த லூசின் லாரண்ட்.

* அடுத்த உலக கோப்பைக் கால்பந்து ஜெர்மனியில் 2006ம் ஆண்டு நடக்க இருக்கிறது.

* நான்காண்டுக்கு ஒரு முறை உலக கோப்பை நடைபெறும். இடையில் இரண்டுமுறை உலககோப்பை போட்டிகள் நடத்தப்படவில்லை.

* ஒரே போட்டியில் ஐந்து கோல்களைப் போட்டவர், ரஷ்ய வீரர் ஒலெக் சலன்கே. இந்தச் சாதனையை இதுவரை யாரும் எட்டியதில்லை.

* இரண்டாம் உலகப் போர் நடந்த காலகட்டத்தில் இத்தாலியைச் சேர்ந்த ஒடொரினோ என்பவர்தான் கால்பந்து உலக கோப்பையை பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருந்தார்.

* கால்பந்தாட்டத்தின் முன்னோடி சீனாதான். 'ஸுகு' என்ற பெயரால் இவ்விளையாட்டை அழைத்து வந்தனர். ஆங்கிலேயர்கள் 'ஸுகு'வை 'ஃபுட்பால்' என்று மாற்றினர்.

— **கோல் கீப்பர்**



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ஓவியப் போட்டி, கைக்கடிகாரப் போட்டி, அனுபவங்கள், துணுக்குகள், படக்கதைகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா *(6 இதழ்கள்)* ரூபாய் 36/- ஒரு வருட சந்தா *(12 இதழ்கள்)* ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

குழந்தைகளின் தோழர்கள்!



நாம் குழந்தைகளைப் பார்க்கும்போது 'பொம்மை மாதிரி எவ்வளவு அழகா இருக்கு...' என்று வியந்து மகிழ்ந்திருக்கிறோம். குழந்தைகளை மட்டுமல்ல, பொம்மைகளையும் நம் எல்லோருக்கும் பிடிக்கும். குழந்தைகளின் முதல் தோழன் பொம்மைதானே?

பண்டைக்காலம் முதலே உலகிலுள்ள பல்வேறு நாடுகளிலும் பொம்மை செய்யும் வழக்கம் இருந்திருக்கிறது. எகிப்தின் கல்லறைகளிலிருந்தும், மறைந்து போன பாபிலோனிய நகரின் சிதைவுகளிலிருந்தும் பொம்மைகள் தோண்டி எடுக்கப்பட்டிருக்கின்றன. சிந்துவெளி நாகரிகத்தைக் காட்டும் ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் அகழ்வாராய்ச்சியின்போது பல களிமண் பொம்மைகள் கிடைத்துள்ளன. இந்தியாவில் பொம்மை செய்யும் கலை சிறப்புற்று விளங்குகிறது. ஒலியுண்டாக்கும் பிளாஸ்டிக் பொம்மை தவிர பஞ்சு, வெட்டுத்துணி, காகிதக் கூழ் முதலியவற்றைக் கொண்டு நாய், பூனை, கரடி போன்ற பொம்மைகளையும் தயாரிக்கின்றனர். தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை மிகவும் புகழ் பெற்றது. இதன் அடிப்பகுதி களிமண்ணால் ஆனது.





15 ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியில் மரப் பொம்மைகள் செய்யப்பட்டன. பின்னர் இது அமெரிக்கா முதலிய நாடுகளுக்குப் பரவியது. பொம்மைத் தொழில் சீன நாட்டில் சிறந்து விளங்குகிறது.



இன்று கண்ணாடி, பிளாஸ்டிக், ஃபர் (Fur) பொம்மைகள் மிகவும் புகழ் பெற்றுள்ளன. ஒவ்வொன்றும் வடிவம், தன்மை, வண்ணம், அளவுகளில் மாறுபட்டிருக்கின்றன.

பொம்மைகளில் எப்படி வேறுபாடுகள் உள்ளனவோ அதேபோல் பொம்மைகளின் பயன்பாட்டிலும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன.

சில பொம்மைகள் வெறும் விளையாட்டுக்காகவும், சில அழகுக்காகவும் சில கற்பனைத் திறனை வளர்க்கவும், சில ஞாபக சக்தியை அதிகப்படுத்





தவும் பயன்படுகின்றன. கல்வி வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் பொம்மைகள் குழந்தைகளிடமும் பெரியவர்களிடமும் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன.

பெற்றோரும் உறவினரும் நமக்கு வாங்கித் தரும் பொம்மைகளைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். அவர்கள் வாங்கித் தந்த பொம்மையை நீண்ட நாட்களாக நீங்கள் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறீர்கள் என்பதே அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.



கொஞ்சி விளையாடப் பயன்படுத்தும் விளையாட்டுப் பொம்மைகள் உங்களிடம் நிறைய இருக்கும். அதோடு கல்வி வளர்ச்சிக்குப் பயன்படும் பொம்மைகளிலும் ஆர்வங்காட்ட வேண்டும். இவ்வகை பொம்மைகளில் இருந்து அறிவியல், கணிதம், வரலாறு, மொழி போன்ற பல விஷயங்களைக் கற்றுக் கொள்ள முடியும்.

சில பொம்மைகளில் பிளாஸ்டிக் மற்றும் வேதிப் பொருள் கலந்த, உரியக் கூடிய வண்ணப் பூச்சு இருக்கக்கூடும். அந்தப் பொம்மைகளைப் பயன்படுத்துவது உடல் நலத்துக்கு உகந்ததல்ல. சில பொம்மைகளில் காணப்படும் ஃபர் போன்றவை சின்னக் குழந்தைகளுக்கு அலர்ஜியை ஏற்படுத்தும். இவற்றில் எப்போதும் கவனம் தேவை.

சிங்கம், புலி போன்று நாம் பயப்படும் பிராணிகளைக்கூட பொம்மை வடிவில் பார்க்கும்போது அன்பு ஏற்பட்டுவிடுகிறது. சுட்டை விரல் அளவு பொம்மையிலிருந்து ஆளுயர பொம்மைகள்கூட வலம் வருகின்றன. அவற்றின் தரத்துக்கு ஏற்றவாறு விலையும் இருக்கிறது.




துப்பாக்கி போன்ற வன்முறைப் பொம்மைகளை வைத்து மற்றவரை மிரட்டி விளையாடுவது நல்ல பழக்கமா? கெட்ட பழக்கமா? நீங்களே சொல்லுங்கள்!



அட்டையில்: **பூஜா**
வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**


தின்னியூர் பண்ணையார் ஒரு ஏமாற்றுக் காரன்— பேராசைக் காரன்.
ஏழைகளை ஏமாற்றிப் பணம் பறிப்பான்.
ஒரு நாள்~
சோமு, உன் தங்கை கல்யாணத் துக்குப் பாத்திரத் துக்கு என்ன பண்ணப் போறே?
பண்ணை -யார் கிட்ட தான் பாத்திரம் கடன் வாங் கணும்.
சோமு, கவனம்! போன மாதம் நம்ம முருகன் கிட்டே வாடகையும் வாங்கிட்டு, பாத்திரங்கள் உடைஞ்சுதுன்னு பொய் சொல்லி அதற்கெல்லாம் பணத்தையும் பறிச்சுட்டான்!
சரி... என்ன பண்றது, வேற வழியில்லை.
குட்டி போட்ட பாத்திரங்கள்!
கதை: ஆர்.சாரதா
படம்:
கல்யாணம் நடந்து, மறுநாள்~
ஐயா ஒரு சந்தோஷமான விசயம். உங்க பாத் திரங்கள் குட்டி போட் டிருக்கு!
என்ன உள றல்!
அப்படியா! சரி.. எல் லாத்தையும் வச்சிட்டுப் போ!
ஆகட் டுங்க.. வரேங்க!
சரி வந்த மட்டுக் கும் லாபம்!
அமுக் கிட வேண் டியது தான்!
இரண்டு மாதம் கழித்து~
குழந்தைக்குக் காதுகுத்து விழா வச்சிருக்கேன். பாத்திரம் வாடகைக்கு வேணும், ஐயா!
அதுக் கென்ன, வெள்ளிப் பாத்திரமே தரேன்... குட்டி போட் டால் என் னிடம் கொடுத் துடணும்.
நல்லதுங்க!


நாலு நாளைக்குப் பிறகு-
வா சோமு.. என்ன சோகமா இருக்கே?
நீங்க கொடுத்த பாத்திரமெல்லாம் இறந்து போச்சுங்க!
என்னடா இது உளறல்?.. பாத்திரம் எப்படி இறக்கும்?
பாத்திரம் குட்டி போடும் போது, இறக்காதா என்ன?
போன தடவை குட்டி போட்ட பாத்திரங்களை நான் கொடுத்தப்போ ஆசையோட வாங்கிட்டீங்களே, இப்போ இதையும் ஏத்துக்கிங்க!
சரி சோமு; நான் செஞ்சது தப்பு தான். இனிமேல் இப்படி பண்ண மாட்டேன்.
கவலைப் படாதீங்க!.. உங்க பாத்திரங்களை வாசலில் பத்திரமா கொண்டாந்து வச்சிருக்கேன். ஐயா மனம் மாறியதே பெரிய விஷயம்!
சோமு உன் குட்டி போட்ட பாத்திரங்களை நீயே எடுத்துக்கோ!



வீரம் வேண்டும்; விவேகமும் வேண்டும்!

கம்சன் இறந்ததும் அவனுடைய மனைவியரான அஸ்தி, பிராப்தை என்ற இருவரும் தங்கள் தகப்பனாரிடம் போய் அழுது முறையிட்டார்கள். ஜராசந்தன் ரொம்பக் கோபம் அடைந்தான். கிருஷ்ணன், பலராமன் இருவரையும் போரில் அழிப்பேன்; யாதவ குலத்தையே நாசமாக்குவேன் என்று சபதம் செய்து, பெரும் படையுடன் புறப்பட்டான்.

கண்ணனுக்கும் பலராமனுக்கும் இந்திரன் இரண்டு ரதங்களையும் பல்வேறு போர் ஆயுதங்களையும் தேவலோகத்திலிருந்து அனுப்பி வைத்தான். அந்த ரதங்களில் ஏறி, ஆயுதங்களைப் பயன்படுத்தி, கண்ணனும் பலராமனும் ஜராசந்தனின் சேனையை அழித்தனர். ஜராசந்தன் தோல்வி கண்டு ஓடிப் போனான். ஆனால் மீண்டும் படை திரட்டி வந்தான். இவ்வாறு திரும்பத் திரும்ப பதினேழு தடவை படையெடுத்து வந்தும் மதுராபுரியை வெற்றி கொள்ள அவனால் முடியவில்லை. கண்ணன் பலராமனின் வீரம் அந் நகரைக் காத்தது.

பதினெட்டாம் முறை ஜராசந்தன் நன்கு யோசித்து பலரைக் கலந்தாலோசித்து காலயவனன் என்பவனைத் தன் நண்பனாக்கிக் கொண்டான். ஒருசமயம் கார்க்க முனிவரை யாதவர்கள் ஏளனம் செய்து அவமதித்து அவர் கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பழி வாங்குவதற்காகவே கார்க்க முனிவர் தவம் செய்து காலயவனனைத் தம் மகனாகப் பெற்றிருந்தார். எனவே இந்த முறை தனக்கு வெற்றி நிச்சயம் என்று ஜராசந்தன் நம்பினான்.

ஆனால் ஜராசந்தன் திட்டத்துக்கு எதிர் திட்டம் வகுத்தான் கண்ணன். யாதவர்களைக் காப்பதற்காக யாரும் புக முடியாத கோட்டையை உருவாக்கி, அதில் யாதவர்களைக் குடியேற்றினான். அந்தக் கோட்டையையும் அதனுள்ளே சகலவசதிகளுடன் ஒரு நகரையும் உருவாக்க தேவலோக சிற்பி விசுவகர்மா கண்ணனுக்கு உதவினார். இதுதான் துவாரகாபுரி உருவான வரலாறு.


காலயவனன் தலைமையில் பெரும் சேனை துவாரகாபுரியை நெருங்கியது. காலயவனனைத் தன்னால் வெல்ல முடியாது என்பதை உணர்ந்த கண்ணன் துவாரகையை விட்டுப் பயந்து ஓடுவது போல் நடித்தான். காலயவனன் கண்ணனைத் துரத்திக் கொண்டு ஓடினான். ரொம்ப தூரம் ஓடி ஒரு குகைக்குள் புகுந்தான் கண்ணன். ஒளிந்து கொண்டான். காலயவனன் பின் தொடர்ந்தான்.

அங்கே அனிர இருட்டில் ஒருவர் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தான் காலயவனன். கண்ணன்தான் சோர்ந்துபோய் படுத்திருக்கிறான் என்று நினைத்து ஒரு உதை விட்டான்! ஆனால் அங்கே உறங்கிக் கொண்டிருந்தவர் முசுகுந்த சக்கரவர்த்தி! அவர் தூக்கத்தில் எழுப்பப்பட்டதால் கோபமடைந்து காலயவனனை ஒரு பார்வை பார்த்தார்! காலயவனன் எரிந்து சாம்பலானான்!


ஏன், எப்படி? என்பதையெல்லாம் அடுத்த இதழில் பார்க்கலாம். வீரத்தால் வெல்ல முடியாதபோது கண்ணன் விவேகத்தால் வென்றான் என்பதை இப்போது உணரலாம்.

ஆசிரியர்

கதை கதையாம் காரணமாம்!



குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. எலக்ட்ரிக் (5)
5. மருத்துவ குணம் மிக்க கசப்பான சுவையுடைய மரம் (3)
6. இலவசம் (3)
7. பழமையான விளையாட்டுகளுள் ஒன்று. மூச்சு விடாமல் விளையாட்டின் பெயரைச் சொல்வார்கள் (3)

வலமிருந்து இடம்

3. எமனின் வாகனம் (3)
4. ________ சாதம் வெயிலுக்கு நல்லது. (3)
8. பெரிய சீரகம் (3)
10. நேரத்தைத் துல்லியமாகக் காட்டும் இது (5)

மேலிருந்து கீழ்

1. இரவில் மின்னும் பூச்சி (4)
2. தேசிய மாணவர் படை என்பதை ________ இயக்கம் போன்றது என்றும் கூறலாம் (4)
3. சுறுசுறுப்புக்கும் கடின உழைப்புக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் பூச்சி (4)
6. உலோகங்களில் ஒன்று. இது துருப்பிடிக்கக் கூடியது (4)
7. பாரதியாருக்கு ________ என்றாலே கசப்பாக இருந்தது (4)

கீழிருந்து மேல்

4. ________ தலைகாக்கும் என்பார்கள் (4)
5. ________யில் ஒற்றுமை காண்பதே இந்திய ஒருமைப்பாடு (4)
8. பிறந்த நேரம், நாள், நட்சத்திரங்களைப் பார்த்து எதிர்காலத்தைக் கணிக்கும் கலை (4)
9. பட்டம் என்பதை இப்படியும் அழைக்கலாம் (4)
10. நாரதர் ________ நன்மையில் முடியும் (4)

- விக்னேஷ், ஒன்பதாம் வகுப்பு,
எஸ்.ஆர்.வி. மேல்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி.

விடை 64 ஆம் பக்கம்

மு.நடராசன்

"என்ன ஹரி, இந்த அப்பா கடைசியா இப்படி சொல்லிட்டுப் போயிட்டார்'' என்று வருத்தத்தோடு கேட்டாள் தங்கை சுபா.

"எனக்கும் எரிச்சலாய்த்தான் இருக்கு. இந்த அப்பா இப்படி சொல்வார்ன்னு நான் கொஞ்சம்கூட நினைக்குலே, சுபா!, என்ன செய்யறது?"


"வா, அம்மாகிட்ட போய் பேசிப் பார்ப்போம்!" அம்மா வசுமதியைத் தேடி சமையலறைக்குச் சென்றாள் சுபா.

''அம்மா, என்னம்மா நீங்க? ஆண்டுத் தேர்வுக்கு நாங்க படிக்கிறபோதெல்லாம், கோடை விடுமுறையில் ஊட்டிக்குச் சுற்றுலா அழைத்துப் போகிறோம்னு ஆசை காட்டிட்டு இப்போ சுற்றுலா போக முடியாதுன்னு சொன்னா என்ன அர்த்தம்?" கோபத்தில் படபடத்தாள் சுபா.

"பெங்களூர் கப்பன் பார்க்கையும், மைசூர் பிருந்தாவனத்தையும், ஊட்டி ஏரியையும் விடுமுறையில் பார்க்கப் போகிறோம் என்ற நினைவே ஒரு தூண்டுகோலாய் அமைய, கடுமையாகப் படித்து திருப்தியாய் ஆண்டுத் தேர்வுகளை முடிச்சிருக்கோம். இப்ப சுற்றுலா அழைத்துப் போக முடியாதுன்னு சொன்னா, அது எங்களை ஏமாத்தற மாதிரிதானேம்மா?" என்று தன் பங்குக்கு வினா எழுப்பினான் ஹரி.

"சுற்றுலா அழைத்துப் போக முடியாததற்கு அப்பா சொல்ற காரணம் நியாயமா இருக்கே'' வசுமதி சமாளித்தார்.

''என்ன பெரிய காரணம்? கிராமத்துல இருந்து அத்தைப் பசங்க



சுற்றத்தை விடவா சுற்றுலா?

கோடை விடுமுறைக்காக இங்கே வர்றாங்களாம். இது ஒரு காரணமா? அவங்களை வர வேண்டாம்னு சொல்லிட்டாப் போச்சு.''

''என்ன சுபா இப்படி சொல்ற? உணர்வுகள் எல்லாருக்கும் ஒண்ணுதானே. உங்களை மாதிரிதானே அந்தப் பிள்ளைகளும் நினைச்சிருக்கும். ஏற்கெனவே மனக் கசப்பில் இருந்த அத்தை, இப்போதான் கொஞ்சம் உறவு கொண்டாடத் தொடங்கியிருக்காங்க.



''விடுமுறைக்கு மாமா வீட்டுக்குப் போகப் போறோம். சினிமா பார்க்கலாம், பீச்சுக்குப் போகலாம், சுண்ணாம்பாறு படகுத் துறையில் படகுச் சவாரி செய்யலாம், மாமா வீட்டில் மகிழ்ச்சியா இருக்கலாம்னு அத்தைப் பிள்ளைங்க அன்புமணியும் முத்தழகியும் கற்பனைகளோட இருப்பாங்க. அவங்க கனவுகளைச் சிதைக்கிறதும் நியாயமில்லை. பெங்களூரும், மைசூரும் எங்கே ஓடிப் போகுது? அடுத்த விடுமுறைக்குப் போனால் போச்சு.

''விட்டுக் கொடுக்கற குணத்தை வளர்த்துக்கணும். அதிலும் அடுத்தவர்களுக்காக விட்டுக் கொடுக்கிறதுல ஒரு சுகம் இருக்கு. செய்து பாருங்க புரியும்'' - என்றார் வசுமதி.

''ஆமா, எதையாவது சொல்லி எப்பவும், எங்களைச் சமாதானப் படுத்திடுவே. சுற்றுலா இல்லைன்னு ஆகிப் போச்சு. இனிமேல் என்ன...'' விரக்தியோடு சென்றனர் ஹரியும் சுபாவும்.

மறுநாள் காலையிலேயே அன்புமணியையும் முத்தழகியையும் அழைத்துக்கொண்டு, அத்தையும் மாமாவும் வந்திருந்தனர்.

அப்பா முகத்தில் பெருத்த சந்தோஷம். அம்மா முகம் மலர அவர்களை வரவேற்றார். பொய்யான புன்னகையை உதட்டில் தவழ விட்டவாறே அவர்களை வரவேற்றனர் ஹரியும் சுபாவும். 'தங்களின் சுற்றுலா கனவு சுக்கு நூறாய்த் தகர்ந்து போனது அவர்களால்தான்' என்ற எண்ணம் அவர்கள் மனத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது.

''அன்புமணி, முத்தழகி வாங்க சாப்பிடலாம். சாப்பிட்ட பிறகு பயணக் களைப்பு தீர கொஞ்சம் ஓய்வு எடுங்க. மாலையில் பீச்சுக்குப் போகலாம். ஹரி, சுபா நீங்களும் வாங்க சாப்பிடலாம்'' வசுமதி அழைத்தார்.

''அவங்க சாப்பிடட்டும், நாங்க அப்புறமா சாப்பிட்டுக்கிறோம்'' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு போனார்கள் ஹரியும் சுபாவும்.

மாலை சிற்றுண்டிக்கு எதைச் செய்யலாம் என யோசித்த வசுமதி

ஹரியைக் கூப்பிட்டு, "ஹரி, கொஞ்சம் கடைக்குப் போய் அரைகிலோ வெண்ணெய் வாங்கி வாப்பா" எனக் கூறி பையையும் பணத்தையும் அவன் கையில் கொடுத்தார்.

"அன்புமணியையும்கூட அழைச்சுக் கிட்டு போயேன். பேசிக்கிட்டே போய் வரலாம்ல." வசுமதி கூற-

"வேண்டாம்மா, நான் தனியாவே போயிட்டு வரேன். அவன் வேற எதுக்கு?" நறுக்காய்ச் சொல்லிவிட்டுப் படியிறங்கினான் ஹரி. அன்புமணிக்கு என்னவோ போல் இருந்தது.

மதியம் அனைவரும் ஒன்றாய் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோதுகூட, ஒப்புக்கு இரண்டொரு வார்த்தைகள் மட்டுமே பேசினர் ஹரியும் சுபாவும்.

"சுபா, துணிகளைத் துவைத்து வாளியில் போட்டு வைச்சிருக்கேன். அதை எடுத்துக்கிட்டுப் போய் மாடியில காய வைச்சுட்டு வா. முத்தழகியையும் துணைக்கு அழைச்சுக்கிட்டுப் போ."

"என்னம்மா நீ. காட்டுக்கா போறேன் துணைக்கு அழைச்சுக்கிட்டுப் போக. துணி உலர்த்தத்தானேம்மா. முத்தழகிக்கு வேற ஏன் சிரமம்?" அந்த நேரத்தில் ஆர்வமாய் வாளியைத் தூக்கிய முத்தழகியிடமிருந்து, வெடுக்கென சுபா பிடுங்கிக் கொண்டு போக, முகத்திலடித்தாற்போல் இருந்தது முத்தழகிக்கு.

எதற்காக இப்படி நடந்து கொள்கிறார்கள் என்பது வசுமதிக்கு நன்றாகவே புரிய, தனிமையில் அவர்களிடம் பேசித்தான் வழிக்குக் கொண்டு வர வேண்டும் என மனத்திற்குள் நினைத்துக்கொண்டார்.

அன்றுமாலை பீச்சுக்குப் புறப்பட்ட போதுகூட தலைவலி என்று சொல்லி போகாமல் இருந்துவிட்டனர் ஹரியும் சுபாவும். அவர்கள் நடந்துகொண்ட விதம் இயல்பானதாக இல்லை. இதை உணர்ந்தபோது மனத்தில் வலி தெரிந்தது அன்புமணிக்கு.

"நம்ம சுபாவும் ஹரியும் வரலையா?" அலுவலகத்திலிருந்து நேரே பீச்சுக்கு வந்து அவர்களுடன் சேர்ந்து கொண்ட சுபாவின் அப்பா கேட்க, "தலைவலியா இருக்கு, நீங்க போயிட்டு வாங்கன்னு சொல்லட்டாங்க" என்றார் வசுமதி.

பீச்சில்கூட கலகலப்பாய் இருக்க முடியவில்லை அன்புமணிக்கும் முத்தழகிக்கும். கடைத் தெருவில் சுற்றியபோது, "அன்புமணி உனக்குப் பிடித்தது எதையாவது வாங்கிக் கொள்" என்றபோதுகூட அடியோடு மறுத்துவிட்டான் அன்புமணி.


"என்ன வாயாடி. எப்பவும் பேசிக்கிட்டே இருப்பே. ஏன் மௌன சாமியார் மாதிரி இருக்கே?" என்று சீண்டியபோதுகூட "ஒண்ணுமில்லை மாமா" என்பதோடு முடித்துக்கொண்டாள் முத்தழகி.


இரவு, கூடத்தில் அமர்ந்து அத்தையுடன் அம்மாவும் அப்பாவும் பேசிக் கொண்டிருந்தது தெளிவாகக் கேட்டது, தலைவலி என்ற பாவனையில் அறையில் படுத்துக் கொண்டிருந்த ஹரிக்கும் சுபாவுக்கும்.

"என்னம்மா, முத்தழகிக்கும் அன்புமணிக்கும் இங்கே வந்தது பிடிக்கலையா என்ன? முகம் வாட்டமா இருக்கு. கடற்கரையில கூட ஏதும் கலகலப்பாக இல்லையே" அப்பா கேட்டார்.

லண்டனில் முதல்முதலாக பொது மக்களுக்கான பஸ்ஸை 1829ம் ஆண்டில் விட்டார்கள். ஆனால் இந்த பஸ்ஸில் எஞ்ஜின் கிடையாது. இதை மூன்று குதிரைகள் இழுத்தன. 32 பிரயாணிகளுக்கான இட வசதி இருந்தது!

- எஸ்.விஜயா சீனிவாசன்





''ஐயோ! அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை. சொல்லப் போனா, இங்கே வரணும்னு எங்களை வற்புறுத்தி அழைச்சுக்கிட்டு வந்ததே அவங்கதான். இதற்காக அவர்கள் பள்ளியில் ஏற்பாடு செய்திருந்த சுற்றுலாவையே வேண்டாம்னு புறக்கணிச்சிட்டு இங்கே வந்திருக்காங்க. நீங்க வேறே...'' என அத்தை சொல்ல,

''என்னது சுற்றுலாவா?'' ஆச்சரியமாகக் கேட்டார் அப்பா. உள்ளே படுத்துக் கொண்டிருந்த ஹரியும் சுபாவும் எழுந்து அமர்ந்துகொண்டனர்.

''ஆமாண்ணா. அவங்க பள்ளியில தேர்வு முடிந்ததும் கொடைக்கானல் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்திருந்தாங்க. நாங்ககூட, பணத்தைக் கொடுத்து போய்ட்டு வாங்கன்னுதான் சொன்னோம். ஆனால் பிள்ளைங்க ரெண்டு பேருமே, 'இந்தக் கோடைவிடுமுறைக்கு மாமா வீட்டுக்குத்தான் போகணும். ஹரியிடமும் சுபாவிடமும் கலகலப்பாய்ப் பேசி, அரட்டையடிச்சி எவ்வளவு நாளாச்சு. அவங்களோட சினிமா, பீச்சென்று ஊர் சுற்றி, விவாதம் செய்து, ஜாலியா விளையாடிப் பொழுதுபோக்குவதில் கிடைக்கும் இனிமையையும் சுகத்தையும் விடவா கொடைக்கானல் சுற்றுலா பெரிசுன்னு பையைத் தூக்கிக்கிட்டு இங்கே வந்துட்டாங்க'' - அத்தை.

யாரோ கன்னத்தில் ஓங்கி அடித்தாற் போல் இருந்தது உள்ளே இருந்த ஹரிக்கும் சுபாவுக்கும். 'அன்புமணியிடமும் முத்தழகியிடமும் இருந்த பாசமும் நேசமும் நம்மிடம் ஏன் இல்லாமல் போனது? இருவர் மனத்திலும் இந்தக் கேள்வி எழ, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ளவே வெட்கப்பட்டனர்.

திடீரென்று அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த சுபா, ''அம்மா, வலியெல்லாம் பறந்து போச்சுமா. சீக்கிரம் வந்து சாப்பாடு போடுங்க. நான் போய் அன்புமணியையும் முத்தழகியையும் அழைத்துக்கொண்டு வரேன்'' என்று துள்ளி ஓடினாள்.

''அம்மா, இன்று இரவு முழுக்க நாங்க ஜாலியாகப் பேசி அரட்டை அடிக்கப் போறோம். இந்தக் கோடை விடுமுறையை மறக்க முடியாத அளவுக்கு அன்புமணியிடமும் முத்தழகியிடமும் இனிமையாகப் பழகிக் கழிப்போம்'' என்று உறுதி கொடுத்தான் ஹரி. ●

என்ன விலை?

காலடியில் உலகை உருட்டிப் பந்தாட வேண்டுமென கனவு கண்டவன் தைமூர். ஒரே காலுடைய ஒப்பற்ற சிங்கமென சரித்திரம் கூறும் தைமூர் தன்னுடைய அலங்கார மண்டபத்தில் மாமன்னர்கள் மண்டியிட்டு வணங்க, தனது சபையின் பிரதான கவிஞர் கெர்மானியுடன் மகிழ்ச்சி கொப்பளிக்க உரையாடிக் கொண்டிருந்தான்.

"கெர்மானி, என்னை விற்பதானால் என்ன விலைக்கு விற்பாய்?"

தைமூரின் இறுமாப்பை அடக்க நினைத்த கவிஞர் சட்டென்று கூறினார்: "25 வெள்ளிக் காசுகளுக்கு விற்பேன்."

தைமூருக்கு ஆச்சரியமாக இருந்தது. "என் இடுப்பில் கிடக்கும் தோல் வார் மட்டுமே நீ சொன்ன விலையாயிற்றே" என்று சொல்லி ஏளனமாகச் சிரித்தான்.

"நான் சொன்னதே அந்தத் தோல் வாருக்குரிய விலைதான்"– கவிஞர்.

தைமூர் நிலைகுலைந்து போனான்.

– ஏ.கே. நாசர்,
லெட்சுமாங்குடி அஞ்சல்.

நன்றாக ஓடினால் கப் கிடைக்கும்!

கப்

கி.வா. ஜகந்நாதன் நண்பர் ஒருவரின் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ரசம் ஊற்றியபோது இலையில் அது ஓட ஆரம்பித்தது. அந்த வீட்டு இல்லத்தரசி, ஒரு பெண்ணிடம் "சீக்கிரம் ஒரு 'கப்' கொண்டுவா. ஊற்றிக் கொடுக்கலாம்" என்று சொன்னார். "ஆமாம். நன்றாக 'ஓடினால்' எப்படியும் 'கப்' கொடுத்துத் தானே ஆக வேண்டும்" என்றார் கி.வா.ஜ.

– ஆர். ராஜலட்சுமி.
காந்தி கிராமம், கரூர்.

துரத்தல்...

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ட்ரூமன், ஒரு சமயம் பலத்த போலீஸ் காவலுடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

அவர் காரை முந்திச் செல்ல யத்தனித்த வேறொரு காரிலிருந்து ஒருவர், ட்ரூமனை நோக்கி, "ஐயா... வேகமாகச் சென்றுவிடுங்கள். உங்களைப் போலீஸ் துரத்திக் கொண்டிருக்கிறார்கள்" என்றார்!

துணிச்சல்!

அந்த ஊர் கோயில் யானை குளத்தில் நீராடிவிட்டுத் திரும்பும்போது, மதம் பிடித்து ஓடத் துவங்கியது. கடைத் தெரு வழியாக ஓடிய யானையைக் கண்ட மக்கள், திசைக்கு ஒருவராகச் சிதறி ஓடினர். யானை ஓடி வருவதைக் கண்ட ஒரு சிறுவன் துணிச்சலாக கோயிலுக்கு ஓடிச் சென்று சங்கிலியை எடுத்து வந்து யானைக்கு முன் வீசினான். சங்கிலியைக் கண்ட யானை அடங்கி நின்றது.



• காமராஜ்

நெருக்கடி ஏற்பட்டபோது, கொஞ்சமும் நிதானம் இழக்காமல், சமயோசிதமாக நடந்து கொண்டு ஆபத்தைச் சமாளித்த அந்தச் சிறுவன் பிற்காலத்தில் சிறந்த தலைவராக விளங்கினார். அவர்தான் பெருந்தலைவர் காமராஜ்.

– ஏ.கே. நாசர்.


தண்டனைகள்...

தேசபக்தியில் சிறந்து விளங்கி, விசாரணைக் கைதியாயிருந்த வீர சவார்க்

கருக்கு ஆங்கிலேய அரசு ஆயுள் தண்டனை விதித்தது. அதைத் தெரிவிப்பதற்காக அவரிடம் வந்தார் ஓர் ஆங்கிலேய அதிகாரி.

"உங்களுக்கு இரண்டு ஆயுள் தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. இதைத் தெரிவித்துப் போகவே வந்தேன்" என்றார் அந்த அதிகாரி.


அதைக்கேட்ட சவார்க்கர், "மனிதனுக்கு ஒரே ஆயுள்தானே உண்டு? அவனுக்கு இரண்டு ஆயுள் தண்டனைகள் விதிப்பது எவ்வகையில் பொருந்தும்?" என்று திருப்பிக் கேட்டார். உடனே அந்த அதிகாரி சற்றுக் கேலியாக, "அதுவா? இந்தப் பிறவிக்கு ஒன்று, அடுத்த பிறவிக்காக ஒன்று. ஆக இரண்டு தண்டனைகள் தங்களுக்குத் தரப்பட்டுள்ளன" என்றார். அந்த வேதனை மிக்க நேரத்தில் கூட அதைப் பற்றிச் சிறிதும் சஞ்சலம் அடையாமல் சிரித்தபடியே, வீர சவார்க்கர் "அப்படியா? மிகுந்த மகிழ்ச்சி. எனக்கு இப்படி இரண்டு தண்டனைகளை வழங்கியதன் மூலமாக மனிதனுக்கு மறுபிறவி உண்டு என்ற இந்து மதத்தின் மேலான தத்துவத்தை உங்கள் ஆங்கிலேய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. அதுவே என் வெற்றியாகும்" என்றார்.



• பிகாசோ



• ட்ருமன்



• கி.வா.ஜ.

— எஸ். துர்கா காத்யாயனி,
பத்தாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி.

பலே அரசியல்வாதி!

நவீன ஓவியங்களை நளினமாக வரைவதில் பிகாசோ ஈடு இணையற்றவர். ஓவியர் பிகாசோ தம் நெருங்கிய நண்பரும் அரசியல் பிரமுகருமாகிய ஆல்பர்ட் டேனியல் என்பவரோடு பேசிக் கொண்டே ஒரு நவீன ஓவியத்தை வரைந்து கொண்டிருந்தார். நண்பர் 'தமாஷ்' ஒன்றைச் சொல்லவே பிகாசோ க்ளுக் என உடல் குலுங்கிச் சிரிக்க, அந்த அதிர்ச்சியால் அருகிலிருந்த வண்ணக் கலவைக் கிண்ணம் அவரது இடதுகை பட்டுத் தடுமாறியது. மறுகணம் அந்த அரசியல் புள்ளியின் மேலுடையில் வர்ணம் அலங்கோலமாகச் சிதறிவிட்டது.

பிகாசோ நல்ல மனிதர். எனவே அரசியல்வாதியிடம் நாசுக்காக மன்னிப்புக் கோரினார். அரசியல் பிரமுகரோ எதிர்பாராமல் நடந்த அந்நிகழ்ச்சியை லேசாக எடுத்துக் கொண்டவராக விஷமப் புன்னகை செய்தபடி, "பிகாசோ, இப்பொழுது நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். உங்கள் வண்ணக் கலவை கொட்டியதால் என் சட்டை கெட்டுப் போய்விட்டதில் எனக்கு நஷ்டம் எதுவுமில்லை. இந்தச் சட்டையின் அடியிலே உங்கள் கையெழுத்தை மட்டும் போட்டுத் தாருங்கள். நீங்கள் வரைந்த ஓவியம் என்று நான் இதை நல்ல விலைக்கு விற்று விடுவேன்" என்றார். பிகாசோவும் நண்பரின் ஆசைப்படி அந்தச் சட்டையில் தம் கையெழுத்தைப் போட்டார்.

— கே. சுதர்ஷன், தூத்துக்குடி



விடுகதைப் பக்கம்

விரிந்த தட்டில் நிறைந்த பலகாரம் – அது என்ன?

I. 1. விரிந்த தட்டில் நிறைந்த பலகாரம்! விருந்துக்குதான் ஆளில்லை - அது என்ன?

2. ஆயிரம் பேர் அணி வகுப்பர். ஆனாலும் தூசி கிளம்பாது - அது என்ன?

3. ஓடையில் ஓடாத நீர், ஒருவரும் குடிக்காத நீர் - அது என்ன?

4. தொட்டால் சுருங்கிக்குத் தொண்ணூறு கால் - அது என்ன?

5. தலையை வெட்ட வெட்ட கறுப்பு நாக்கு நீளும் - அது என்ன?

6. கைபட்டு மலரும்; கால்பட்டு மறையும் - அது என்ன?

7. மட்டை உண்டு, கட்டை இல்லை; பூவுண்டு மணமில்லை - அது என்ன?

— ஆ. சந்தியா, எட்டாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, நல்லூர்

II. 1. அரைச் சாண் குள்ளனுக்குக் கால் சாண் தொப்பி - அது என்ன?

2. ஆற்றிலும் குளத்திலும், கடலிலும் விழுந்தாலும் நனைவதில்லை - அது என்ன?

3. ஏறாத கொடியிலே ஏழாயிரம் மணிகள் - அது என்ன?

4. பொழுது போனால் பூந்தோட்டம்; விடிந்தால் வெறுந்தோட்டம் - அது என்ன?

5. மண்ணுக்குள்ளே வெள்ளை மீன் - அது என்ன?

6. முச்சந்தியில் மூன்று விளக்கு. பார்த்து நடந்தால் பாதுகாப்பு - அது என்ன?

7. மீசை வைத்த சிறிய அத்தை; மினுமினுப்பாகப் போகிறாள் - அது யார்?

— ஆர் ராஜலட்சுமி, கரூர்

III. 1. விண்ணைச் சிரிக்கச் செய்வாள்; கண்ணைப் பறிக்கச் செய்வாள் - அவள் யார்?

2. காடு, மலை தாண்டிடுவான்; கால் இல்லை, கை இல்லை அவன் யார்?

3. பக்கத்திலேயே இருப்பான்; படுத்தால் மறைவான் - அவன் யார்?

4. உண்டதை நினைப்பான்; உதைகளை மறப்பான்; துணைக்கு வருவான் அவன் யார்?

— ஆர். குட்டிபிரசன்னா, கரூர்

IV. 1. சுற்றிக் கொண்டே சுகம் தருவான் - அவன் யார்?

2. கை வைத்தால் கண் திறப்பான் அவன் யார்?

3. சூரியன் பார்க்காத நீர். உடலுக்கு குளிர்ச்சி தரும் நீர் - அது என்ன நீர்?

4. நான் என் அம்மாமீது தான் நடப்பேன் - நான் யார்?

— எஸ். அமீர்ஜான், பதினோராம் வகுப்பு, அ.மே.நி. பள்ளி, நல்லூர்

விடைகள் :

I. 1. நட்சத்திரம் 2. எறும்புக் கூட்டம் 3. கண்ணீர் 4. மரவட்டை 5. பென்சில் 6. கோலம் 7. வாழை

II. 1. பேனா 2. சூரிய ஒளி 3. கேழ்வரகுக் கதிர்கள் 4. வானம் 5. முள்ளங்கி 6. சிக்னல் 7. கரப்பான்பூச்சி

III. 1. மின்னல் 2. மேகம் 3. நம் நிழல் 4. நாய்

IV. 1. மின் விசிறி 2. டியூப் லைட் 3. இளநீர் 4. அம்மி, உரல்


அசையாத அலை!
கதை: ஜி. வாட்சன் டி கோஸ்டா
ஒன்பதாம் வகுப்பு, குன்னூர்.
படம்: தமிழ்
செல்வந்தர் ராமசாமியின் வீட்டில் ஏராளமான இளைஞர்கள் கூடியிருந்தனர்.
இளைஞர்களே! இவள் என் மகள் பானு. மிகவும் புத்திசாலி. இவளைத் திருமணம் செய்து கொள்ள ஒரு நிபந்தனை...
எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறோம்.
பானு, நீயே அதைச் சொல்லிவிடு.
அசையாத அலைகள் உள்ள கடற்கரையை என் அப்பாவிடம் யார் காட்டுகிறாரோ அவரையே நான் திருமணம் செய்து கொள்வேன்.
இளைஞர்கள் திகைத்தனர்.
யாராலும் முடியாது. வாங்க போகலாம்.
இது என்ன முட்டாள்தனமான நிபந்தனை?
புகைப் படத்தில் தான் அலை அசையாது. நீதான் என் மகளுக்கு ஏற்ற மாப்பிள்ளை.
ரொம்ப நன்றி சார்.
மறுவாரம் குரு, ராமசாமி வீட்டுக்கு வந்தான்.
நீங்கள் எங்கும் வர வேண்டாம். இதோ நானே கொண்டு வந்து விட்டேன்.
என்னப்பா, என்னை எந்தக் கடலுக்கு அழைச்சிட்டுப் போகப்போறே?

எங்கள் ஊரில் நடந்தது



நல்ல பிள்ளை


என் தங்கை ஏதாவது வேலை செய்ய மறுத்தாலோ சாப்பிட மறுத்தாலோ "நீதான் நல்ல பிள்ளை, அக்கா கெட்ட பிள்ளை" என்று சொல்லி ஏமாற்றி அவளிடம் காரியம் சாதித்துக் கொள்வது எங்கள் அப்பாவின் வழக்கம். ஒரு நாள் தங்கைக்கு உடல்நிலை சரியில்லாததால் ஏதோ கசப்பான மருந்தைக் குடிக்கச் செய்ய, "நீதான் நல்ல பிள்ளை மருந்தைக் குடிச்சிடு" என்று அப்பா சொன்னார். என் தங்கை அவசரமாக "நான் நல்ல பிள்ளையில்லை, மோசம். அக்காதான் நல்ல பிள்ளை. அக்காவைக் குடிக்கச் சொல்லுங்க" என்றதும், அப்பாவின் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

– எஸ். துர்கா காத்யாயனி,
பதினோராம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் மகளிர்
மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி.

சில்லறை...

நான் பேருந்தில் சென்றுகொண்டிருக்கும் போது என் அருகில் இருந்த பெரியவர், கண்டக்டரிடம் ரூபாயைக் கொடுத்து தான் செல்ல வேண்டிய இடத்திற்கு டிக்கட் வாங்கிக் கொண்டு மீதிச் சில்லறையைக் கேட்டார். அதற்கு கண்டக்டர் "சில்லறை இல்லை" என்றார். உடனே பெரியவர், "பையக் கொடுங்க" என்றார். அதற்கு கண்டக்டர் கோபமாக "நான் சொல்வதை நம்பாமல் பையக் கேக்கிறீங்களே" என்றார். அதற்குப் பெரியவர் "உங்களுடைய பையைக் கேட்கவில்லை. சில்லறையை மெதுவாகக் (பையக்) கொடுங்க என்றேன்" என்று விளக்கினார். இந்த உரையாடலைக் கேட்டு கண்டக்டர் உட்பட அனைவரும் சிரித்தோம்.

– சு. சௌந்தர்யா,
கண்டவராயன்பட்டி,
சிவகங்கை மாவட்டம்.



அழவெந்தான்!

மேலே வந்தது ஏன்?

ஒருமுறை குடும்பத்துடன் ஊட்டி சென்றபோது நீண்ட நேரம் காத்திருந்தும் 'தொட்டபெட்டா' செல்ல பஸ் கிடைக்கவில்லை. பிறகு ஒரு டாக்ஸியை ஏற்பாடு செய்து கொண்டு சென்




றோம். என் தம்பியை அங்கிருந்த 'டெலஸ்கோப்' மூலம் மலையடிவாரத்தைப் பார்க்கச் செய்தேன். அவன் பார்க்கும் போது "கீழே எவ்வளவு அழகான காட்சி! அற்புதமான சீனரி! பார்த்தியா?" என்று கேட்டார் அப்பா. அவன் உடனே, "அட போங்கப்பா! கீழே இவ்வளவு அற்புதமான காட்சியெல்லாம் இருக்கிறப்ப எங்களை ஏன்

கஷ்டப்பட்டு மேலே கூட்டிகிட்டு வந்தீங்க?" என்றானே பார்க்கலாம்!

— தா. முகமது இக்பால், தஞ்சாவூர்.

அழுகை

எங்கள் அத்தை வீட்டிற்குச் சென்றிருந்தேன். அத்தையின் பக்கத்து வீட்டுப் பெண் ஒருவர் கைக் குழந்தையைக் கொண்டு வந்து அத்தை வீட்டில் விட்டுவிட்டு "கொஞ்சம் நவீனைப் பார்த்துக்குங்க அக்கா, கடைக்குப் போயிட்டு சீக்கிரமா வந்திடறேன்" என்று சொல்லிச் சென்றார். சில நிமிடங்கள் விளையாடிக் கொண்டிருந்த அவன் திடீரென்று தனது அம்மாவை நினைத்து 'ஓ' வென்று அழ ஆரம்பித்து விட்டான். உடனே அத்தைப் பையன் பிரபு என்னைப் பார்த்து, "தினமும் இப்படித்தான் அக்கா, அவங்க அம்மா கொண்டு வந்து விட்டுட்டுப் போவாங்க... அப்புறம் இவன் அழ ஆரம்பிச்சுடுவான். இவன் வந்தாணாவே அழுகைதான். இனிமே இவனை 'அழ வந்தான்'னுதான் கூப்பிடணும்"என்று சொல்ல எல்லோரும் சிரிக்க ஆரம்பித்து விட்டோம். பிறகு அத்தை அவன் அம்மாவிடம் "உங்க நவீனுக்கு எங்க பிரபு 'அழவந்தான்'னு பேரு வெச்சிருக்கான், ரொம்பப் பொருத்தமான பேருதான்" என்று சொல்ல அவரும் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தார்.



— எஸ். வித்யா லட்சுமி மல்லசமுத்திரம்.

போன் லாக்

"எங்கள் பாட்டியுடன் உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் அனைவரும் வீட்டில் இருந்தனர். நான் அந்த வீட்டுப் பையன்களுடன் விளையாடிக் கொண்டிருந்தேன். பாட்டி பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டார். வழியில் பாட்டி "போன் போட்டு வீட்ல இருந்த உன் அம்மாவுக்கு ஒரு செய்தி சொல்லலாம்னு நம்பரைச் சொன்னதுக்கு அந்தப் பொண்ணு அவர் 'லாக்' போட்டிருக்கார். பசங்க சும்மா, யார்கிட்டயாவது பேசறாங்கன்னு இப்படி பண்ணியிருக்கார். அவர் வந்த உடனே பேசலாம்னு சொல்லிச்சு. நானும் வேண்டாம்னுட்டு வந்துட்டேன். வரும்போது பார்த்தேன். போன் பூட்டாமதான் இருந்தது" என்றார். போனைப் பூட்டுவது என்றால் என்ன என்று கேட்டேன். "அதான் பட்டையா கதவு மாதிரி சாத்திப் பூட்டுவாங்களே..." என்றார் பாட்டி. (பழையமுறை, எங்கள் வீட்டில் முன்பு இருந்தது). பிறகு நான் 'மறைமுக எண்' போட்டு கம்ப்யூட்டர் லாக் செய்யும் முறையைக் கூறியதும் "அப்படியா, பாவம் அந்தப் பொண்ணை சந்தேகிச்சேனே" என்று உண்மையாகவே வருத்தப்பட்டார் பாட்டி.



— த. வரதராஜன், அம்மையப்பன்.

ஒரு ஊரில்...

நாங்கள் கோடை விடுமுறையில் பாட்டி வீட்டிற்குச் சென்றிருந்தோம். எங்கள் பாட்டி நன்றாகக் கதை சொல்வார். ஒருநாள் இரவு தூங்கப் போகும் போது என் தம்பி மனோ அவரிடம் ஒரு கதை கூறச் சொன்னான். அவரும், "ஒரு ஊர்ல ஒரு ராஜா இருந்தார்" என்று ஆரம்பித்தார். உடனே மனோ, "ஒரு ஊர்ல ஒரு ராஜாதான் இருப்பார். ரெண்டு ராஜா இருந்தா அவங்களுக்குள்ள சண்டை வரும்" என்றான். உடனே அனைவரும் விழுந்து விழுந்து சிரித்ததில் தூங்கிக் கொண்டிருந்த உறவினர்கள் அனைவரும் விழித்து விட்டனர்.

— எம். வினோத், விருத்தாசலம்.

சோலையூரில் ராமு, தாமு இருவரும் இணை பிரியா நண்பர்கள். இருவருக்கும் பெற்றோர் இல்லை. நிலம் நீச்சு எதுவும் கிடையாது. வறிய நிலை. எனவே, ஊரின் பொது இடத்தில் அருகருகே இரு குடிசைகளை அமைத்துக் கொண்டு, அதில் வாழ்ந்து வந்தனர்.

தினசரி, இருவரும் அருகில் இருந்த காட்டுக்குப் போய், விறகு வெட்டி வந்து, விற்றுப் பிழைத்தனர்.

ராமு எப்போதும் அறிஞர்களுடன் சேர்ந்து வாழவே விரும்பினான். அவர்களிடமிருந்து நல்லவற்றைக் கற்றுத் தன் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது அவனுடைய ஆசை!

ஆனால், தாமுவுக்கு அத்தகைய எண்ணம் எதுவும் கிடையாது. 'திடீர் அதிர்ஷ்டம் அடிக்காதா... அதன் மூலம் பெரும் செல்வம் சேராதா.... அதைக் கொண்டு வீட்டில் உட்கார்ந்து உண்ண மாட்டோமா...' என்று கனவு கண்டு கொண்டிருந்தான்.



ஒரு நாள் மாலை, வழக்கம் போல் இருவரும் விறகுக் கட்டைத் தலையில் சுமந்து கொண்டு, பேசியவாறே வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். ராமு வருத்தத்துடன் "எல்லாரையும் போல் நாமும் நான்கு எழுத்துப் படிக்காமல் போய் விட்டோமே..." என்று வருத்தப்பட்டான்.

இடைமறித்த தாமு, "டேய் ராமு...! அதெல்லாம் வீண்டா... படித்து என்ன ஆகப்போகிறது...? அதன் பிறகும் பணம் உழைத்தால்தானே கிடைக்கும்...? ஆகவே, படிக்காமலே திடீரென்று அதிர்ஷ்டம் அடித்து நிறையப் பணம் சேர்ந்தால் போதுமே...படிப்பு வேண்டாம்... அதிர்ஷ்டத்தை நம்பு..." என்றான்.

அச்சமயம், சற்றுத் தூரத்திலிருந்து, "ஐயோ... தொலைந்தேன். யாராவது வாங்களேன்... வந்து காப்பாற்றுங்களேன்" என்ற உரத்த குரல். பதறிப் போன இருவரும், தலைச் சுமையை அப்படியே கீழே போட்டு விட்டு, அலறல் வந்த திசையை நோக்கி ஓடினர்.

அங்கு அரக்கன் ஒருவன், முனிவர் ஒருவரைத் தாக்கி, அவருடன் கட்டிப்பிடித்துச் சண்டையிட்டுக் கொண்டு இருந்தான்.

ராமு – தாமுவால், முனிவர் படும் துன்பத்தைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. எனவே, என்ன ஆனாலும் சரி என்று இருவரும் அரக்கனுக்கு அருகில் ஓடித் தம்மிடம் இருந்த கோடரியை அவன் மீது வீசி எறிந்து அவனைத் தாக்கினர். அந்த இரு கோடரிகளும் அவனது இரு கைகளையும் துண்டித்

ஜானகிமணாளன்



கல்வியா, செல்வமா?

தன. உடனே அந்த அரக்கன் வேரறுந்த மரம் போல் தரையில் விழுந்தான்.

ஆனால், அவன் உயிர் பிரிவதற்குள், அங்கு ஒரு அதிசயம் நடந்தது. அரக்கன் கீழே விழுந்த இடத்திலிருந்து, அவனுடைய உடல் ஒரு மனித உருவாக மாறி, ஓர் இளவரசன் எழுந்து நின்றான்.

அந்த இளவரசன் ஓடிவந்து, ராமு – தாமுவின் கைகளைப் பற்றிக் கொண்டு, ''மிக்க நன்றி! அரக்கனாகச் சபிக்கப்பட்டிருந்த எனக்கு, மீண்டும் மனித உருவம் கிடைக்க உதவி செய்த உங்கள் இருவரையும் நான் என்றென்றும் மறக்கவே மாட்டேன்...'' என்றான்.

ராமு – தாமுவுக்கு ஒன்றும் புரியவில்லை. இளவரசன் தொடர்ந்தான்: ''நான் பக்கத்து நாட்டு அரசன் மகன். ஒரு சமயம், வேட்டையாடுவதற்காக இந்தக் காட்டுக்கு வந்தேன். அப்போது, தவறுதலாக ஒரு சூனியக்காரியை என் அம்பு தாக்கி விட்டது. உடனே, அவள் என்னை அரக்கனாகச் சபித்துவிட்டாள். நான் கெஞ்சிக் கேட்டுக் கொண்ட பிறகு, அவள், 'ஒரு நாள், நீ ஒரு முனிவரைத் தாக்குவாய். அவரைக் காப்பாற்றுவதற்காக, இரண்டு இணைபிரியா நண்பர்கள் வந்து உன் கைகளைத் துண்டிப்பார்கள். அப்போது கீழே விழும் நீ, பழைய இளவரசனாக உருப்பெற்று எழுவாய்...' என்று எனக்குச் சாப விமோசனம் கொடுத்தாள். அது முதல் நான் இந்தக் காட்டிலேயே திரிந்து கொண்டிருக்கிறேன். இப்போது நீங்கள் இருவரும் வந்து என்னைக் காப்பாற்றினீர்கள்... மிக்க நன்றி...''

''ஓ... அப்படியா....?'' என்று ராமு, தாமு அதிசயித்தனர்.



தொடர்ந்த இளவரசன், ''எனக்குச் சாப விமோசனம் செய்ததற்காக, உங்கள் இருவருக்கும் ஏதாவது நல்லது செய்ய விரும்புகிறேன். என்ன வேண்டும்? கேளுங்கள்'' என்றான்.

தாமு எதிர்பார்த்திருந்தது இத்தகைய அதிர்ஷ்டத்தைத்தானே! எனவே, சட்டென்று அவன், ''இளவரசே! எனக்கு மூட்டை நிறையப் பொற்காசுகள் வேண்டும், தருகிறீர்களா?'' என்றான்.

''ஓ... கண்டிப்பாக...'' என்ற இளவரசன், ''என்னோடு அரண்மனைக்கு வந்து வாங்கிச் செல்'' என்றான்.

அதற்குள் ராமு தாமுவிடம், ''டேய்! முட்டாள் தனம் செய்து விட்டாயே...! செல்வத்தை விடக் கல்விதானடா உயர்ந்தது. என்றும் நிலையானது...'' என்றான். அதைத் தாமு காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை.

இளவரசன் அதற்குள், ''உனக்கு...?'' என்பதைப் போல், ராமுவைப் பார்த்தான்.


ராமு அரசகுமாரனிடம், ''இளவரசே! எனது பெற்றோர் இருந்திருந்தால், நான் நன்றாகக் கல்வி பயின்று பெரிய அறிஞன் ஆகியிருப்பேன். அந்த வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லையே என்று நான் வருந்தாத நாளில்லை. அந்த வருத்தத்தைப் போக்குங்கள். அது போதும்'' என்றான்.

அதைக் கேட்டு இளவரசன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். உடனே அங்கிருந்த முனிவரிடமே, ''ஐயா! ராமுவைப் பெரிய அறிஞனாக்க வேண்டியது உங்கள் பொறுப்பு... அதற்கு உண்டான சகல உதவிகளையும் என் அரசாங்கம் உங்களுக்குச் செய்து தரும்'' என்று ராமுவை அவரிடம் ஒப்படைத்து விட்டு விடை பெற்றான்.

தாமுவும் இளவரசனுடன் சென்று, பத்தாயிரத்துக்கும் மேல் அடங்கிய பொற்காசு மூட்டையைப் பெற்றுச் சென்றான். ராமு, முனிவருடன், அவர் ஆசிரமம் சென்று அவரிடம் கல்வி கற்கத் தொடங்கினான்.

ஆண்டுகள் பல கடந்தன. ராமு முனிவரிடம் பற்பல நூல்களைக் கற்றுப் பெரிய அறிஞன் ஆனான். அவனுடைய புலமை பற்றிய செய்தி நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் பரவியது. 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்பதற்கு ஏற்ப, அவனும் பல இடங்களுக்கும் சென்று, பற்பல உபதேசங்களைச் செய்து மக்களை நல்வழிப்படுத்தினான்.

அவ்வாறு, சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டிருக்கும்போது ஒரு சமயம், அவன் தனது சொந்தக்கிராமமான சோலையூர் வந்தான். அவ்வூர் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு வந்து, பாசத்துடன் அவனை வரவேற்றனர். அவனுக்குத் தனது சின்னவயது நண்பன் தாமுவின் நினைவு வந்து விட்டது. அவனைச் சந்திக்க ஆவல் கொண்டான். எனவே, தன்னுடன்



வந்தவர்களையும் அழைத்துக் கொண்டு, தனது பழைய குடிசை இருந்த இடம் நோக்கி நடந்தான்.

வழி முழுவதும் ராமுவின் மனத்தில் தாமு பற்றிய எண்ணம் தான் 'அவன் அரசனிடம் ஏராளமான பொன்னும் பொருளும் பெற்றிருப்பான். அதைக் கொண்டு பலவித வசதிகளைத் தேடிக் கொண்டிருப்பான். இப்போது நிம்மதியாகத் தன் விருப்பத்துக்கு ஏற்பப் பெரிய மாளிகையில் வசித்துக் கொண்டிருப்பான்...' என்று இன்னும் பலவாறு ஓடியது அவனது எண்ணம்.

ஆனால், அங்கு போய்ப் பார்த்ததும் ராமு திடுக்கிட்டான். அந்த இடத்தில் மாளிகை ஏதும் இல்லை. முன்பு தாமு வசித்த அவனுடைய அதே குடிசைதான் அவனை வரவேற்றது. வாசலில் தாமு நின்றிருந்தான். அவனிடம் வறுமையான தோற்றம்தான் காணப்பட்டது.

ராமு தாமுவை நெருங்கினான். அதற்குள் தாமுவே அவனருகில் ஓடி வந்து, ''என்ன ராமு? என்னை அடையாளம் தெரிகிறதா? நான்தான் தாமு... உன்னுடைய பழைய நண்பன்'' என்று கட்டியணைத்துக் கொண்டான்.

அதைக் கேட்ட ராமு, மிகுந்த வேதனையுடன் கண்ணீர் விட்டான். ''சரி தாமு... இளவரசனிடம் முன்பு நீ ஏராளமான பொற்காசுகளைப் பெற்றாயே! அத்தனை செல்வம் வந்துமா உன்னிடம் இந்த வறிய நிலை...? என்ன செய்தாய் அத்தனை செல்வத்தையும்? இங்கு எப்படி தொலைந்தன? திருடர் எவரும் வழிப்பறி செய்து விட்டனரா?'' என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனான்.

அதற்குத் தாமு, ''ராமு! செல்வம் வந்ததும், என் கெட்ட காலமும் என்னிடம் வந்துவிட்டது. புத்தி பேதலித்துப் போய்ச் சேரக் கூடாத நண்பர்களுடன் சேர்ந்தேன். விருப்பம் போல், அவர்கள் காட்டிய தீய வழிகளில் அத்தனை செல்வத்தையும் செலவழித்து அழித்தேன். இப்போது என்னுடன் மிஞ்சியிருப்பது இந்த வறுமை நிலை மட்டுமே...'' என்று அவன் கைகளைப் பற்றிக் கொண்டு அழுதான். ராமு அவனுக்கு ஆறுதல் கூறினான்.

''தாமு! உனக்கு இப்போது ஒரு உண்மை புலப்பட்டிருக்குமே! 'கல்வி நிலையானது. அழியாதது. செல்வத்தை விட உயர்ந்தது' என்றேனே! நீ கேட்டாயா...? இப்போது விளைவைப் பார்த்தாயா...? போனது போகட்டும். இனியாவது கவனமுடன் இரு... புது வாழ்வு தொடங்கு...'' என்றான் ராமு!

தாமுவும் புரிந்துகொண்டான்.

கைக்கடிகாரங்கள் யாருக்கு?

ஏப்ரல் இதழில் அறிவித்த போட்டியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஆனால் இருவர் மட்டுமே சரியான விடைகளை அளித்திருந்தனர். எனவே அவர்கள் இருவரும் கைக்கடிகாரங்களைப் பெறுகின்றனர்.


பரிசு பெற்றவர்கள்:

1. அ.தி. திருஆதவன்,
லால்குடி லயன்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி,
லால்குடி.

2. தி.நந்தினி,
பத்தாம் வகுப்பு,
புனித சவேரியார் உயர்நிலைப்பள்ளி,
நீர்முளை, நாகை மாவட்டம்.

சரியான விடை:
1. தேனீ, 2. கொசு,
3. தும்பி, 4. குளவி,
5. எறும்பு, 6. கறையான்

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள்
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி


வெள்ளை
தேவதை!

அன்னம். இந்தப் பெயரை நாம் கதைகளிலும், கவிதைகளிலும் நிறைய கேள்விப்பட்டிருக்கிறோம். நளன் - தமயந்தி கதையில் அன்னம்தான் தூது சென்று முக்கியப் பங்காற்றியது.

அழகும் கம்பீரமும் உடைய பெரிய நீர்ப்பறவை அன்னம். இதன் உருவத்தை வைத்தே இது வாத்து இனத்தைச் சேர்ந்தது என்று சொல்லிவிட முடியும்.

அன்னத்தின் நடை மெது





வாகவும் அழகாகவும் இருக்கும். ஆணும் பெண்ணும் ஒரே மாதிரி காணப்படும்.

நீண்ட கழுத்தைக் கொண்டு நீருக்குள் நெடுந்தூரம் துழாவி இரை தேடும். புழு, நத்தை, மீன் முட்டைகள், நீர்த் தாவரங்களின் வேர், கிழங்கு, தண்டு, இலை, விதை முதலியவற்றைத் தின்னும். சாப்பிடும்போது மண் மற்றும் தேவையில்லாத பொருட்களை அலகால் வடிகட்டி விட்டு உணவை மட்டும் விழுங்கும்.

வசந்த காலத்தில் குளிர்ச்சியான பகுதிகளுக்குச் சென்று, ஏரிக் கரைகளில் நாணல் முதலிய நீர்த் தாவரங்களைச் சேகரிக்கும். சேகரித்தவற்றை வைத்து பெரிய கூட்டை உருவாக்கும். கூட்டின் உட்பகுதி மென்மையாக இருக்கும். அக்கூட்டில் பெண் அன்னம் 5 முதல் 9 முட்டைகள் வரை இடும். தாய் அன்னம் 35 முதல் 40 நாட்கள் வரை அடை காக்கும். பெண்ணுக்கு ஆண் அன்னம் காவல் இருக்கும்.

அன்னத்தின் குஞ்சு

எஸ். சுஜாதா

முதலில் பார்ப்பதற்கு விகாரமாகக் காட்சியளிக்கும். பிறந்து ஓராண்டு கழித்துதான் குஞ்சுக்கு வெண்மையான, அழகான இறகு முளைக்கும். இரை தேடப் பழகிய குஞ்சுகள் சில காலம் வரையிலும் இரவு நேரங்களில் பெற்றோரைத் தேடி வருகின்றன. அப்பொழுதெல்லாம் தாய் அன்பாகக் குஞ்சுகளைக் கவனித்துக் கொள்ளும். குஞ்சுகளைப் பராமரிக்கும்போது தாய்க்குத் தந்தையும் உதவி செய்யும். குஞ்சுகள் தாயின் முதுகில் ஏறி விளையாடுவதும்,



அன்னங்களில் பத்து வகைகள் இருந்தாலும் அவற்றில் நான்கு வகைகள் தான் மிகவும் முக்கியமானவை. அவை ஊமை அன்னம், சீழ்க்கை அன்னம், காரன்னம், கருங் கழுத்தன்னம்.

ஊமை அன்னம் :

இது மற்ற எல்லா அன்னங் களையும் விடப் பெரியது. தூய வெண்பனி நிறத்தில் காணப்படும். கழுத்து மெலிந்து நன்றாக வளைந்து இருக்கும். பவளம் போன்ற சிவந்த அலகின் அடியில் கரிய புடைப்பு ஒன்று இருக்கும். கண்கள் பழுப்பு நிறமுடையன. கால்கள் கருமையாக இருக்கும். குரல் மெல்லியதாக இருக்கும். வீடுகளில், பூங்காக்களில் வளர்க்கப் படும் அன்னங்கள் ஒலியை எழுப்புவது இல்லை. எனவே இவை ஊமை அன்னம் என்று வழங்கப்படுகின்றன. இதன் தாயகம் ஐரோப்பா. தற்போது அமெரிக்காவிலும் காணப்படுகின் றன.

சீழ்க்கை அன்னம் :

இதுவும் வெண்மையானது. அமெரிக் காவிலும் ஐரோப்பாவிலும் காணப் படுகிறது. இப்பறவைக்குக் கழுத்துச் சற்றுக் குட்டையாகவும் தடித்தும் இருக் கும். அலகு மஞ்சள் நிறம் உடையது. பறக்கும்போது இனிய குரலோடு கூவிக் கொண்டே போகும்.

காரன்னம் :

உருவத்தில் இது சற்றுச் சிறியது. ஆஸ்திரேலியாவில் காணப்படுகிறது. உடல் கறுப்பாகவும், சாம்பல் நிறத் திலும் காணப்படும். சிறகில் உள்ள முதல் இறகுகள் மட்டும் வெள்ளையாக இருக்கும். கண் சிவப்பு. அலகு சிவப் பாகவும் நுனியில் வெள்ளையாகவுமிருக் கும்.

கருங்கழுத்தன்னம் :

இது தென் அமெரிக்காவில் உள்ளது. தலையும் கழுத்தும் கறுப்பாகவும் மற்ற பாகங்கள் வெண்மையாகவும் இருக் கும்.

அலகு சாம்பல் நிறம். இது கழுத்தை நேராக நீட்டிக் கொண்டு பறக்கும்.

ஏதாவது ஆபத்து என் றால் அதன் இறக்கையின் அடியில் ஒளிந்துகொள்வதும் அடிக்கடி நிகழும் காட்சிகள்.

உருவம் பெரிதாக இருந்தாலும் அன்னம் நன்றாகப் பறக்கும். இவற்றில் சில இனங்கள் மணிக்கு 40 - 50 மைல் வேகமாகப் பறக்கின்றன. கூட்டமாகப் பறக்கும்போது V வடிவில் அணி வகுத்துச் செல்கின்றன.

சாதாரணமாக அன்னம் அறுபதாண் டுகள் வரை உயிர் வாழும். பழங்காலத் தில் நூறாண்டுகள் வரை வாழ்ந்திருக்க லாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

அன்னங்கள் உலகில் பல நாடு களில் வாழ்கின்றன. இருப்பினும் அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் பல்கிப் பெருகி யிருக்கின்றன. இந்தியாவுக்கு அன்னங் கள் குளிர்ச்சியான காலங்களில் வெளி நாடுகளிலிருந்து வலசை வருகின்றன. பறக்கும்போது ஒரு வித ஒலி எழுப்பிக் கொண்டே செல்கின்றன.

உயிர் காட்சிச் சாலைகளிலும், பூங் காக்களிலும் வெள்ளை அன்னமும், காரன்னமும் வைத்து வளர்ப்பதைப் பார்க்கலாம்.

அன்னத்தின் தூய வெண்மையான இறகும், நீண்ட கழுத்தும், சிவந்த அலகும் அதற்கு மிகவும் அழகு சேர்க்கின்றன. அன்னம் நீரில் உடம்பை அசைக்காமல் நீந்திச் செல்வது கண் கொள்ளாக் காட்சியாகும். உலக இலக் கியங்களில் எல்லாம் அன்னப்பறவை தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்திருக்கிறது.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவு கதைப் போட்டி!

கதை எழுத ஆர்வமுள்ளவர்களுக்கு, இதோ ஓர் மகிழ்ச்சியான செய்தி! சிறுவர் இலக்கியம் செழிக்கத் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட அழ. வள்ளியப்பா, கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர். அவர் நினைவாக இந்த ஆண்டும் போட்டி அறிவிப்பதில் கோகுலம் பெருமை கொள்கிறது.



1. இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 உட்பட) மட்டுமே கலந்து கொள்ளலாம்.

2. கதைகள் சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், சமூகம், வரலாறு, அறிவியல் என எதைப் பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம். சொந்தக் கற்பனை என்று உறுதி மொழியுடன் அனுப்ப வேண்டும்.

3. வெள்ளைத் தாளில் ஒருபக்கம் மட்டுமே எழுதலாம். கையெழுத்து தெளிவாகப் புரியும்படி இருக்க வேண்டும்.

4. பரிசு பெறாத, பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையை கதையுடனேயே இணைக்க வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை. இது குறித்து எந்த விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது.

5. இதில் கலந்து கொள்ள கட்டணம் ஏதும் இல்லை. ஒருவரே எத்தனை கதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

6. கதைகளை முதல் முறை வெளியிடும் உரிமை கோகுலத்திற்கே உண்டு. பிறகு இதன் உரிமை முழுவதும் ஆசிரியருக்கே.


7. முடிவு தேதி 31.5.2002. இதற்கு மேல் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்பட மாட்டா.

8. அயல்நாட்டில் உள்ளவர்கள், இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தர வேண்டும்.

9. கதைகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் 'அழ. வள்ளியப்பா நினைவு கதைப் போட்டி' என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

10. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானது.

முதல் பரிசு - ரூ.500/-
இரண்டாம் பரிசு - ரூ.300/-
மூன்றாம் பரிசு - ரூ.200/-



இந்தோனேஷிய
நாடோடிக் கதை
பரிசு!
• மோஹன்
• ஷாஜி மாத்யு
கரம்லாலிடம் மிகவும் வயதான கழுதை ஒன்று இருந்தது. அதை யாரிடமாவது தள்ளிவிட நினைத்தார். ஒரு நாள் –
வா செந்தார். உனக்கு இந்தக் கழுதையைப் பரிசாகத் தரேன். வைத்துப் பிழைத்துக் கொள்.
செந்தாருக்கு மிகவும் மகிழ்ச்சி.
கரம்லால் எவ்வளவு நல்லவர்! என் கஷ்டத்தை அறிந்து எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கிறார்!
சிறிது தூரம் சென்றதும் –
என்னது! ரொம்ப வயதான கழுதை போலிருக்கே! சரியாக நடக்கக் கூட மாட்டேங்கிறதே!
மறுநாள் –
ஐயோ! செந்தார் வர்றானே! அவன் என்னிடம் சண்டை போடுவதற்குள் நானே ஏதாவது செய்ய வேண்டும்.
MALAY FEATURES WORLD RIGHTS RESERVED
எல்லோரும் பாருங்கள். செந்தார் சவாரி செய்யும் கழுதை அவனுக்கு நான் பரிசாகக் கொடுத்தது.
இப்படி ஒரு கழுதையைக் கொடுத்துவிட்டுப் பெருமை வேறா?


செந்தார்! எங்கே போய்க்கிட்டிருக்கே?
மசூதிக்குப் போயிட்டிருக்கேன்.
இன்னிக்குச் செவ்வாய்க்கிழமைதானே! வெள்ளிக்கிழமைதானே மசூதிக்குப் போகணும்.
அதுமட்டுமில்லை. மசூதி ரொம்பவும் பக்கத்தில்தானே இருக்குது.
வெள்ளிக்கிழமை தொழுகைக்கு இன்னிக்கே ஏன் கிளம்பிட்டே?
இந்தக் கழுதையை வச்சுக்கிட்டு வேறென்ன பண்ண முடியும்? இன்னிக்குக் கிளம்பினால் தான் பக்கத்திலிருக்கும் இந்த மசூதியை வெள்ளிக்கிழமையாவது அடையும். அதான்.. வரட்டுமா?
ஒரு கழுதையைக் கொடுத்துட்டு கிண்டல் வேறா?
MALAY FEATURES WORLD RIGHTS RESERVED

திருப்பூர்

திருப்பூர் குமரன் என்கிற அடைமொழியுடன் அழைக்கப்படும் குமரன் திருப்பூரில் பிறந்தவர் இல்லை. இன்றைய ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சென்னிமலையில் 1904ம் வருடம் அக்டோபர் மாதத்தில் பிறந்தவர். நாச்சிமுத்து - கருப்பாயி என்ற நெசவாளர்கள் பெற்ற ஏழை வீட்டு மகன்.

சென்னிமலையில் ஐந்தாம் வகுப்புக்கு மேல் குமரனைப் படிக்க வைக்க பெற்றவர்களின் பொருளாதாரச் சூழல் இடம் தரவில்லை. படிப்பு நின்றதும் குமரன் நெசவுத் தொழிலைக் கற்றுக்கொண்டார்.

நெசவுத் தொழில் பயிற்சி பெற்று சென்னிமலை திரும்பிய மகனைக் கண்டு பெற்றவர்கள் பேரானந்தப்பட்டார்கள். வறுமையில் வாடிக்கொண்டிருந்த குடும்பத்திற்கு வருவாய் தேடித்தர முடிவு செய்தார் குமரன். கற்று வந்த நெசவுத் தொழிலை செய்யத் தொடங்கினார். புதிய வருமானம் குடும்பத்தில் கஷ்டங்களைக் குறைத்தது.

பத்தொன்பது வயது குமரனுக்கும், பதினான்கு வயது இராமாயிக்கும் திருமணம் நடைபெற்றது. நெசவுத் தொழிலில் போதிய ஊதியம் கிடைக்கவில்லை. பிறந்து வளர்ந்த சென்னிமலையையும், பெற்றவர்களையும் பிரிந்து... வேலை தேடி திருப்பூர் சென்றார். நெசவுத் தொழிலோடு நெருங்கிய தொடர்புடைய வணிக நிறுவனங்கள் திருப்பூரில் நிறைய இருந்தன. பல்வேறு முயற்சிகளுக்குப் பின் பஞ்சரைக்கும் தொழிலகத்தில் வேலை கிடைத்தது. எடைப்பதிவு எழுத்தர் பணியைப் பொறுப்போடு பார்த்தார் குமரன். வேலை வழங்கியவரின் நம்பிக்கைக்கு உரியவராக விளங்கினார்.

ஐந்தாம் வகுப்பிற்கு மேல் படிக்க இயலாத குமரன், அந்தக் குறையைப் போக்க அவ்வப்போது நூல்களைப் படிக்கும் பழக்கத்தை மேற்கொண்டார். படிக்கப் படிக்க அவரது அறிவு விசாலமடைந்தது. காந்தியடிகள் நடத்திய போராட்டங்கள் குமரனைக் கவர்ந்தன. காந்தியடிகள் கூறியபடி கதராடை அணிந்தார். நாள்தோறும் ராட்டையில் நூல் நூற்பதைத் தமது கடமையில் ஒன்றாக்கினார்.

திருப்பூரில் தேசப்பற்று வாலிபர் மன்றம் என்ற பெயரில் ஒரு அமைப்பு இருந்தது. அந்த மன்றத்தில் நாட்டுப் பற்று மிகுந்த இளைஞர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள். விடுதலைப் போராட்டத்தில் அவர்கள் அதிக ஆர்வம் காட்டினார்கள். திருப்பூரில் காங்கிரஸ் கட்சி எந்தப் போராட்டத்தைத் தொடங்கினாலும் இந்த மன்ற உறுப்பினர்கள் அதில் கலந்து கொள்வார்கள். இந்த அமைப்பில் குமரன் உறுப்பினராகச் சேர்ந்தார். வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் செயல் புரியவும் அவர் தயங்கவில்லை. மெல்ல மெல்ல பொதுத்தொண்டிலும் ஈடுபட்டார். சுதந்திரத்திற்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்கிற அளவிற்குத் தீவிரத் தொண்டரானார்.



1932ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெலிங்டன் பிரபுவின் ஆணைப்படி காந்தியடிகள் கைது செய்யப்பட்டார். ஆறாம் தேதி திருப்பூரில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அப்பொழுது காந்தியடிகளைக் கைது செய்த செயல் வன்மை



யாகக் கண்டிக்கப்பட்டது. கூட்டத்தின் இறுதியில் பத்தாம் தேதி காலை அறப் போராட்டம் ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டது. அறப்போராட்டம் தொடங்கப் போவதை அறிந்து போலீஸ் படை குவிக்கப்பட்டிருந்தது. பத்தாம் தேதி பொழுது புலர்ந்தது. தொண்டர்கள் முதல் நாள் அறப் போராட்டத்தில் கலந்து கொள்ளத் தயாராக வந்து சேர்ந்தார்கள். அவர்களில் குமரனும் ஒருவர். தொண்டர் படை கிளம்பியது. மூவர்ணக் கொடி ஏந்தி முறுக்கோடு நடந்தார் குமரன்.

''மகாத்மா காந்திக்கு ஜே! வந்தே மாதரம்'' கோஷங்கள் வானைப் பிளந்தன. தெருவில் இரு புறங்களிலும் நின்று கொண்டிருந்த மக்கள் வெள்ளத்தைக் கண்டதும் தொண்டர்கள் ஆரவாரம் செய்தார்கள்.

தொண்டர் படையை எதிர் நோக்கி போலீஸ் படை காத்திருந்தது.

குமரன்


எலியைக் கண்டதும் பூனை பாயுமே அதைப் போல தொண்டர்களைக் கண்டதும் அவர்கள் மீது போலீசார் பாய்ந்தனர். கண், காது தெரியாமல் மூர்க்கத்தனமாகத் தாக்கத் தொடங்கினர். ஆனால் தொண்டர்கள் யாரும் பயந்தோடவில்லை. பின் வாங்கி ஓடவில்லை. அவரது கையில் இருந்த தேசியக் கொடியை வீழ்த்திட போலீசார் நினைத்தனர். அவர்கள் எண்ணம் ஈடேற வில்லை. போலீசாருக்கு ஆத்திரம் பொங்கியது. குண்டாந்தடிகள் குமரன் மூளையில் விழுந்தன. மூளை செயல் இழக்க மாவீரன் குமரன் உடல் மண்ணில் சாய்ந்தது. அப்போதும் அவர் கொடியை விடவில்லை. உயர்த்திப் பிடித்தார். போலீசார் குமரனின் கையில் இருந்த கொடியைப் பிடுங்கினர். குமரனையும் மிதித்தனர்.

குமரன் நடுத்தெருவில் நினைவற்றுக் கிடந்தார். வெகு நேரத்திற்குப் பிறகு மருத்துவமனைக்கு எடுத்துப் போனார்கள். அங்கு சென்ற சிறிது நேரத்தில் அவரது உயிர் பிரிந்தது. ஆம் 1932ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதினோராம் தேதி விடியற்காலை நான்கு மணிக்கு குமரன் அமரரானார்.

தனது வாழ்விற்கு வழிகாட்டிய திருப்பூருக்கு வற்றாத புகழைத் தேடித்தந்து விட்டார் குமரன். சென்னிமலை குமரன் திருப்பூர் குமரனான கதை இதுதான்.

— பொன்திருவரங்கன்,
ஏழாம் வகுப்பு, மானாமதுரை.


ஆரம்பம்
கடலில் சங்கமிக்கும் மழைத்துளி!
'ஜில்' விளையாட்டு
படம் : லலிதா
கடல்


இந்த விளையாட்டுக்கு விதிமுறைகள் அவசியம். 7-ஆம் பக்கத்தில் இருக்கும் குறிப்புப்படி விளையாடுங்கள்.



சலின் அடர்த்தி தான்.

* அமெரிக்காவில் ஆண்டுதோறும் 90 லட்சம் டன் உப்பை நெடுஞ்சாலைகளில் கொட்டுகிறார்கள். ஏன் தெரியுமா? ரோடுகளில் மூடிக் கிடக்கும் ஐஸ் கட்டிகளைக் கரைந்து ஓடச் செய்யத்தான். இதற்கு ஆகும் செலவு ஆண்டுக்கு 200 கோடி ரூபாய்.

* அமெரிக்காவில் உள்ள புகழ்பெற்ற 'எரி' கால்வாயை வெட்ட உப்புதான் உதவியது என்றால் நம்ப மாட்டீர்கள். நியூயார்க் மாநிலத்தில் விளைந்த உப்புக்கு 7 கோடி ரூபாய் வரி விதித்துத்தான் இந்தக் கால்வாய் வெட்டும் செலவைச் சரி கட்டினார்கள்.

உப்பான உண்மைகள்!

* கடல்நீரில் உப்பு விளைவதுதான் பலருக்குத் தெரியும். ஆனால், உலகில் ஒரு நகரம் உப்பினாலேயே அமைந்துள்ளது என்பது நம்மில் பலருக்குத் தெரியாது. போலந்து நாட்டில் உள்ள வெய்லிக்ஸ்கா என்ற நகரின் கீழே முன்னூறு மீட்டர் ஆழத்துக்கும் அடியில் உப்புக் கற்கள் உள்ளன. இவற்றை வெட்டி எடுத்துத்தான் இங்குள்ள கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. தண்ணீரினால் இக்கட்டடங்கள் கரையாமல் இருக்க தனியான ரசாயனப் பூச்சு ஒன்றைப் பூசி தங்கள் இருப்பிடங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றனர்.

* 'உப்பு ஏரி' என்று அழைக்கப்படும் சாக்கடலில் யாரும் விழுந்தால் அமிழ்ந்து போகமாட்டார்கள். மேலேயே மிதப்பார்கள். காரணம் அதில் உள்ள உப்புக் கரைசலின் அடர்த்திதான்.

* உலகில் மொத்தம் 3,50,000 கன மைல் அளவுக்கு உப்புப் படிவங்கள் உள்ளன. உலகில் உள்ள உப்புப் படிவங்கள் அனைத்துமே முதலில் கடல் பரப்புக்குள்தான் இருந்தன.

* முதன்முதலாக உப்புக்கு வரி விதித்தவர்கள் சீனர்கள்தான். ஹாலந்து, ஸ்வீடன் மற்றும் சீன தேசங்களில் கொடிய குற்றம் செய்து தண்டனை பெற்ற கைதிகளுக்கு உப்பில்லாத உணவைக் கொடுக்கும் வழக்கம் இருந்திருக்கிறது.

* நம் இந்தியாவில் கிடைக்கும் உப்பு வெண்மை நிறம் கொண்டது. ஆனால் பிரிட்டனில் கிடைக்கும் உப்பு பொன் நிறமாகவும், சற்றுச் சிகப்பு நிறமாகவும் காட்சி அளிக்கிறது.



ஹங்கேரி நாட்டில் கிடைக்கும் கல் உப்பு நீல ரத்தினம் போன்ற கண்ணைப் பறிக்கும் தன்மை பெற்றுள்ளது.


* ஆஸ்திரேலியாவில் உள்ள மலை வாசஸ்தலமான கிராக்ஸ்மீன் அசைந்து கொண்டே இருக்கிறது. கிராக்ஸ்மீன் என்ற அந்த ஊர் 1000 அடி கனமான உப்புப் படுகையின்மீது இறுகிய பாறைப்படிவம் மீது அமைந்திருக்கிறது. உப்புப் படுகையினால் பாறைகளும் அதன் மேல் உள்ள ஊரும் நகர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆனால், இன்றுவரை இந்த ஊர் மக்கள் எவ்வித ஆபத்தையும் சந்திக்கவில்லை.



* எப்சம் என்னும் வேதி உப்பு கி.பி. 1695-இல் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த உப்பு சிறுசிறு கட்டிகளாகக் கிடைக்கிறது. லண்டனுக்குத் தென்மேற்கில் சுமார் பதினைந்து மைல் தொலைவிலுள்ள எப்ஸம் என்ற நகரிலுள்ள நீருற்றிலிருந்து கிடைப்பதால்தான் இதற்கு எப்ஸம் உப்பு என்று பெயர்.

* மலைப்புறத்தில் வாழும் பழங்குடி மக்கள், தேடி வரும் விருந்தினர்களுக்கு அன்புடன் தயிரை அளிக்கிறார்கள். ஆனால் அத்தோடு கொஞ்சம் உப்பைப் போட்டு அது கரைவதைப் பார்த்த பிறகுதான் அருந்தும்படி கட்டளையிடுகிறார்கள். இந்த விசித்திர செயலுக்குக் காரணம்? எந்த விஷமோ அல்லது தீயதோ கலந்திருந்தாலும் உப்பைப் போட்டவுடன் தயிர் சிவந்து காட்டிக் கொடுத்துவிடுமாம்!

- ஏ.கே.நாசர்




22. ஆளப்பிறந்தவன்

கதை : ராஜி   படம்: லலிதா




ஜெயசிம்மனுடன் வீரசிம்மனையும் தாங்கி வந்த
பல்லக்கு பிரதான கூடார நுழைவாயிலை அடைந்தது.
உடனே சங்கு முழங்கியது.
ஐயோ! நிறுத்துங்கள்.
அம்பு விடாதீர்கள்.
பல்லக்கிலிருந்து வீரசிம்மனை
உதைத்து வெளியேற்றியபடியே –
ஏய், வீரசிம்மா, என்னையா
ஏமாற்றுகிறாய்? வீரர்களே
எல்லோரையும் வளைத்துப்
பிடியுங்கள்.
வீரசிம்மா, வேஷம் போட்டு விட்டால் வெற்றி
கிடைக்கும் என்று பார்த்தாயா?
என்னை ஒன்றும்
செய்து விடாதே!


அரசர் மன்மதரை விடுவித்தபின்—
இளவரசே! இதோ நம் நண்பர் மன்மதவர்மர். இவரைச் சிறை வைத்திருக்கிறான் இந்தக் கயவன்.
அப்படியா?


என்னை மட்டுமல்லாது என் நண்பரின் மகனையும் துன்புறுத்திய இவனைக் கொண்டு போய் கப்பலில் தள்ளுங்கள். மரகதத் தீவின் பாதாளச் சிறையிலே இவன் நாட்களைக் கழிக்கட்டும்.


என் நாட்டில் வீர சிம்மனால் உங்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்கு வருந்துகிறேன்.
என்னைக் காரணமாகக் கொண்டு உன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சினேன்.
நல்லவேளை! எல்லாம் நன்றாக முடிந்தது. வாருங்கள் உள்ளே போகலாம்.
தங்கள் அன்புக்கு நன்றி!
சிறிது காலத்துக்குப் பின் ஜெயசிம்மன் முடிசூட்டிக் கொண்டான். சோமுவை சேனாதிபதியாகவும், கைலாசவைப் பாதுகாப்பு அதிகாரியாகவும் நியமித்துக் கொண்டு நீதி தவறாது நீண்ட காலம் அரசாண்டான் ஜெயசிம்மன்.
(முற்றும்)

நிறையும் குறையும்

சந்திரராமன்

மலர்களில் ரோஜாமிக்க
மயக்கிடும் அழகானாலும்,
மலரதைப் பறித்திடுங்கால்
முட்களும் விரலில் குத்தும்.

வந்தனைக்குதவும் செந்தா
மரையதும் அழகுப்பூவே;
அந்தப்பூ வளரும் இடமோ
ஆழ்கயச் சேற்றிலாகும்.

மயிலதன் உருவத்தழகை
மறுத்தெதிர் சொல்லாதவரும்,
ஒயிலுடன் கூவிற்றென்றால்
உவத்தலாய் இல்லையென்பார்.


அழகெனும் நிறையைக் கண்டே
அவற்றை நாம் விரும்புகின்றோம்;
ஆழ்கயம் முட்கள், குரலும்
அதற்கூறாய் நிற்பதில்லை.

குறைமட்டும் உள்ளவர்கள்
குவலயத்தேதும் இல்லை;
நிறையோடு குறையும் சேர்ந்து,
நிற்றலே இயல்பு ஆகும்.

குறைமட்டும் கண்டு நின்றால்
குருதியின் அழுத்தம் ஏறும்;
நிறையொன்றே கண்டுகொண்டால்
நித்தியம் இன்பம் சேரும்.



முதலில் ஒரு தீக்குச்சி புதிர். இங்கே ஒன்பது தீக்குச்சிகள். மூன்று முக்கோண வடிவில் வைக்கப்பட்டிருக்கின்றன. இதே ஒன்பது குச்சிகளை மாற்றி வைத்து, நான்கு முக்கோணங்களை உருவாக்குங்கள் பார்க்கலாம்!



விடையை இப்பகுதியின் இறுதியில் காணலாம்.

கடவுளைப் பார்த்தேன்!

ஒரு சிறுவன் கடவுளைக் காண விரும்பினான். தன் ஸ்கூல் பையில் கேக், பாப்கார்ன், குளிர்பானம் என்று பலவிதமான உணவுப் பொருட்களை எடுத்து வைத்துக் கொண்டு கடவுளைக் காண புறப்பட்டான். சிறிது நேரம் நடந்தவுடன் ஒரு பூங்கா வந்தது. மரங்கள் நிறைந்த, அழகான அந்தப் பூங்காவைப் பார்த்தவுடன் அவன் சற்று இளைப்பாற விரும்பினான்.

தனியாக உட்கார பயமாக இருந்தது. சற்றுத் தூரத்தில் ஒரு பெஞ்ச்சில் தனியாக ஒரு மூதாட்டி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தவுடன், அவனும் அங்கே போய் உட்கார்ந்துகொண்டான்.


தன் பையைப் பிரித்து, பாப்கார்னை எடுத்து கொறிக்கத் தொடங்கியபோது, அந்த மூதாட்டியைப் பார்த்தான். அவளது கண்களில் தெரிந்த பாசம் அவனைக் கவரவே, அவளுக்கும் பாப்கார்ன் கொடுத்தான். அதை வாங்கிக்கொண்டு, சிறுவனின் தலையை அன்போடு தடவிக் கொடுத்தாள் பாட்டி.

அடுத்து குளிர்பானம் எடுத்து மூதாட்டிக்கும் கொடுத்துவிட்டு, தானும் குடித்தான். அப்படியே மூதாட்டியின் மடியில் படுத்துத் தூங்கிவிட்டான்.

மாலையாகிவிட்டது. பையன் கண் விழித்தான். மூதாட்டிக்கு ஆசையுடன் முத்தம் கொடுத்தான். மூதாட்டி, பையனை அன்புடன் கட்டித் தழுவிக் கொண்டாள்.

இருவரும் புறப்பட்டு, தத்தம் வீடுகளை அடைந்தனர்.

பையன் வீட்டுக்குள் நுழைந்ததும், அவன் முகத்தில் ஒரு சந்தோஷம் இருப்பதைக் கவனித்தாள் அம்மா.




''என்ன ரொம்ப சந்தோஷம் போலிருக்கு?'' என்று அம்மா கேட்டாள். ''ஆம்! நான் கடவுளைப் பார்த்தேன்! ஆசையோடு, என்னைத் தட்டிக் கொடுத்து மடியில் தூங்க வைத்தார். அம்மா, உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? கடவுள் வயதான மூதாட்டி போல இருந்தார்'' என்றான்.

தன் வீட்டுக்குப் போன மூதாட்டி, தன் கணவரிடம் ''உங்களுக்குத் தெரியுமா? நான் இன்று பூங்காவில் ஒரு சிறுவன் உருவில் கடவுளைப் பார்த்தேன்! கடவுள் முகத்தில்தான்

என்ன ஒரு அன்பு'' என்று சந்தோஷமாகக் கூறினாள்.

ஆக, இந்தக் கதையிலிருந்து நமக்கு என்ன புரிகிறது? கடவுள் என்பவர் கோவிலிலோ, சர்ச்சிலோ மட்டும் இல்லை; நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரிலும் கடவுளைக் காண முடியும். காரணம் அன்புதான் கடவுள்!



வலையில் சிக்கியவை



● இந்தப் படத்தைப் பாருங்கள். சட்டென்று என்ன தெரிகிறது? பின்பக்கம் நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிற இளம் பெண்ணா முன்பக்கம் நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிற மூதாட்டியா? (இருவரது பார்வையும் இடது பக்கம்தான்)

முதல் தடவை பார்க்கிறபோதே இளம் பெண், மூதாட்டி இருவரது உருவங்களையும் உங்களால் காண முடிகிறது என்றால் உங்கள் பார்வையும், மூளையும் கூர்மையானது என்று உங்களுக்கு, நீங்களே ஒரு சபாஷ் போட்டுக் கொள்ளலாம்! சிறுமியின் கழுத்துப்பட்டை மூதாட்டியின் வாயாக நினைத்துப் பார்த்தால் உருவம் சட்டெனத் தெரிந்துவிடும்.

● "பூண்டு சாப்பிட்டால் உடம்பு இளைத்து விடுமா? நான் அப்படி கேள்விப்பட்டதே இல்லையே!"

''ரெகுலராக பூண்டு சாப்பிட்டால், ஒருவரும் உன் கிட்டே நெருங்க மாட்டார்கள். எட்ட இருந்து பார்த்தால், உன் உருவம் இளைத்துதானே தெரியும்!"

● அப்பா, அம்மா, ஒரு பையன் எல்லாரும் ஹோட்டலுக்குப் போனார்கள். ஆர்டர் செய்த உணவு ஐட்டங்களில் சிலவற்



றைச் சாப்பிட முடியவில்லை.


"காசு கொடுக்கிறோம். அப்புறம் ஏன், வீணாக்க வேண்டும். சாப்பிடாதவற்றை பேக் பண்ணி வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய் விடலாமே!" என்றாள் அம்மா.

ஆனால் அப்பாவோ, அதை ஒப்புக் கொண்டாலும் சர்வரிடம் அதைச் சொல்லத் தயங்கினார்.

அம்மாவே, "இந்தாப்பா சர்வர்! மீதியை பேக் பண்ணி விடு. எங்கள் வீட்டு நாய்க்குப் போடப் போகிறோம்" என்றாள் ரொம்ப ஸ்டைலாக. அதைக் கேட்ட அவர்களுடைய, வாண்டுப் பையன் "அம்மா! நம் வீட்டில் நாய் கிடையாதே! வாங்கப் போறீங்களா?" என்றான்.

- கௌதம் ராம்

ஆரம்பத்தில் சொன்ன புதிருக்கு விடை இதோ.



மல்லிகைக் கொல்லை

சின்னமணியார் சின்னப்பட்டாளம்

ரா. சுந்தரமூர்த்தி

3

பண்ணையாருடன் காரில் போவது நம்ம பக்கத்து ஆளாகத் தெரியவில்லை. யாரோ தொலைவில் இருந்து வந்தவர் மாதிரி இருக்கிறது. ஏதோ திட்டத்தோடு தான் வந்திருக்க வேண்டும். கிட்டான் யோசித்துக் கொண்டிருந்தான். அதைக் கண்டுபிடித்தாக வேண்டுமே. அவன் சிந்தனை நீண்டது.

"என்ன கிட்டான் ஆழ்ந்த யோசனை?"– செந்தில் கேட்டான்.

"செந்தில், அந்த காரில் பண்ணையாருடன் போகும் ஆளைப் பார்த்தால் எனக்கென்னமோ சந்தேகமாக இருக்கு. நீ என்ன நினைக்கறே?"

"ஆமாம், எனக்கும் அப்படித்தான் தோணுது. ஆள் மூஞ்சியே சரியில்லைன்னு படுது."

"அதுக்கு இப்ப என்ன பண்றது?" என்றாள் சிட்டழகு.

"நம்ம வேலையை உடனே தொடங்கிட வேண்டியதுதான். யோசிக்க நேரமில்லை. நீ நம்ம நண்பர்களிடம் சொல்லிவிட்டு வந்திடு."

"என்னன்னு சொல்றது?"

"எல்லோரையும் சைக்கிளை எடுத்துக் கொண்டு வடக்குச் சாலை இரட்டைப் பனை மரத்தடிக்கு வந்திடச் சொல்லு. மத்ததை அப்புறம் பேசிக்கலாம்."

"வீட்டுல என்னன்னு சொல்லிட்டு வர்றது?" என்றாள் சிட்டழகு.

"பக்கத்து ஊரில் நடக்கற நாடகம் பார்க்கப் போறோம். சீக்கிரம் வந்திடுவோம்னு சொல்லிட வேண்டியதுதான். கூட நானும் வர்றேன்னு சொன்னால் ஒண்ணும் சொல்ல



மாட்டாங்க" என்றான் கிட்டான்.

"சரி. அதுதான் நல்லது" என்று சொல்லி விட்டு ஓட்டம் பிடித்தான் செந்தில்.

"செந்தில் நில்லு" கிட்டான் கூப்பிட்டான். அவன் திரும்பிப் பார்த்தான்.

"என்ன கிட்டான்?"

"முதல்ல நீ உன் வீட்டுக்குப் போய் சாப்பிட்டுவிட்டு, உன் வீட்டுல சொல்லிவிட்டு, அப்புறமா நண்பர்களிடம் போ. ஆனா லேட் பண்ணிடாதே" என்றான் கிட்டான்.

செந்தில் தன் வீட்டை நோக்கி விட்டான் ஓட்டம். கிட்டானும் சிட்டழகும் தங்கள் வீடு நோக்கி நடந்தனர்.



அடுத்த ஒருமணி நேரத்தில் அந்தக் குழு சொல்லி வைத்தபடி வடக்குச் சாலையில் கூடியது.

உதாரணம் எல்லோருக்கும் முன்பே வந்திருந்தான். அது தான் எல்லோருக்கும் ஆச்சரியம்.

"அதிசயம் ஆனால் உண்மைங்கிறது இது தான் போலிருக்குது" என்று கிண்டலடித்தான் செந்தில்.

"அப்பா வீட்டில் இல்லைடா. அம்மா பர்மிஷன். அதுதான் ஓடி வந்துவிட்டேன்" என்றான் அவன்.

"அதானே பார்த்தேன்" என்றாள் சிட்டழகு.

"சரி, அது கிடக்கட்டும்.

கிட்டான், இப்போ நாம செய்ய வேண்டியது என்ன? அதைச் சொல்லு" என்றான் செந்தில்.

"பண்ணையாரோடு அவரது காரில் ஒரு புது ஆளைப் பார்த்தோம். அவன் யார்? இங்கு வந்துள்ள நோக்கம் என்ன? பண்ணையாருக்கும் அவனுக்கும் என்ன உறவு என்பது தெரியவில்லை. ஆனால், இதில் ஏதோ தப்பு இருப்பது மாதிரி படுது எனக்கு" என்றான் கிட்டான்.

"பண்ணையாரின் கார் போன வேகத்தைப் பார்க்க வேண்டுமே. ஏதோ தப்பு பண்ணிட்டு ஓட்டம் பிடிக்கற மாதிரி பறந்து போனது. அவர் அவ்வளவு வேகமாக ஓட்டி யாரும் பார்த்திருக்க முடியாது. அதனால்தான் சந்தேகம் வருது" என்றான் செந்தில்.

''அப்படியா! அப்ப கண்காணித்துவிட வேண்டியதுதான்" என்றான் கிட்டான்.

"அது எப்படி முடியும்?" என்று சந்தேகத்தைக் கிளப்பினான் உதாரணம்.

"கஷ்டம்தான். ஆனால் நாம நினைத்தால் முடியாதது இல்லை" என்றான் கிட்டான்.

"இப்போ நாம போக வேண்டியது எங்கே?" சிட்டழகு தயாராய் சைக்கிளில் ஏறிக் கொண்டே கேட்டாள்.

"சிட்டு, சைக்கிளை என்னிடம் கொடு. நான் ஓட்டுறேன். நீ என்னுடன் 'டபுள்ஸ்' வரலாம்" என்று அவளிடமிருந்து சைக்கிளை வாங்கினான் கிட்டான்.

"கார் போன திசையைப் பார்த்தால் அது அவரது தோட்டத்து வீட்டுப் பக்கம் போன மாதிரிதான் இருந்தது. வாங்க நாமும் அங்கே போகலாம்" என்று சைக்கிளை மிதித்தான் கிட்டான்.

"பண்ணையார் தோட்டத்துக்குள் போக முடியுமா?" என்றான் உதாரணம்.

- இன்று நாம் அருந்தும் தேனீர் முன்பு சீனாவில் மருந்தாக அறிமுகமானது.
- முந்திரி தென் அமெரிக்காவிலிருந்து வந்தது.

— அ. ருக்மணி



''யாருக்கும் தெரியாமல் நுழைஞ்சிட வேண்டியதுதான்" என்றான் செந்தில்.

"மாட்டிக்கிட்டால்?"

"அப்பப் பார்க்கலாம். சமயத்துக்குத் தகுந்த மாதிரி சமாளிக்க வேண்டியதுதான்."

பேசிக் கொண்டே பண்ணையாரின் தோட்டத்துப் பக்கம் நெருங்கி விட்டனர். விளக்கு எரிந்து கொண்டிருந்தது. உள்ளே ஏதோ நடப்பது போல் தோன்றினாலும் பயங்கர நிசப்தம் நிலவியது.

"மெயின் கேட் பக்கம் நெருங்க முடியாது. சுற்றிக் கொண்டு பக்கவாட்டில் ஏதாவது வழி இருக்கிறதா பார்ப்போம்" என்றான் முத்து.

சுற்றிலும் இருள் சூழ்ந்திருந்தது. கிசுகிசுப்பாகப் பேசிக் கொண்டனர். காற்று உர்ர்...உர்ர் என சுழன்று அடித்துக் கொண்டிருந்தது. மரங்கள் சடசடத்து நெட்டி முறித்துக் கொண்டன. நிமிர்ந்து நிற்கும் பனை மரங்கள் காற்றில் ஆடி ஒன்றை ஒன்று நெருங்குவதைப் பார்த்தால் ஏதோ கோபாவேசத்துடன் முட்டிக் கொள்வது போலிருந்தது.

சைக்கிளின் 'கிரீச்' ஒலி சத்தம் கேட்கவே சைக்கிளை விட்டு இறங்கி தள்ளிக் கொண்டு வந்தனர். கிட்டான் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். 'பென் டார்ச்' பத்திரமாக இருந்தது.

தோட்டத்தைச் சுற்றி அறுவடை முடிந்த வயல் வெளி திடலாகக் கிடந்தது. பாதை ஓரம் இருந்த ஒரு புதர் மறைவில் சைக்கிள்களை நிறுத்தி விட்டு, ஒருவர் பின் ஒருவராக நடந்தனர்.

கிட்டத்தில் யாரோ வரும் சத்தம் கேட்கவே கிட்டான் சட்டென தனது டார்ச்சை அடித்து குனிந்து எதையோ தேடுவது மாதிரி பாவனை செய்தான்.

"என்னடா பண்றே?" என்றான் முத்து.

''உஷ்... எல்லோரும் தேடுவது மாதிரி பண்ணுங்க சொல்றேன்" சைகையால் பேசினான் கிட்டான்.

"ஏய், யார்டா அங்கே?" ஒருவர் குரல் கொடுத்துக் கொண்டே வந்தார். அவர் முதியவர் என்பதால், குரல் ஓங்கி ஒலிக்கவில்லை. வேகமாக அருகில் வந்த அவர், "என்ன தேடுறீங்க இங்கே?" என்றார் கோபமாய்.

கிட்டான் டார்ச்சை அணைத்துவிட்டு அவருக்குப் பதில் சொன்னான்.


"ஐயா, எங்க காற்றாடி ஒன்னு அறுந்து காற்றில் பறந்து போய் இந்தப்பக்கம் வந்து விழுந்து விட்டது" சமயோசிதமாகப் பேசினான்.

எல்லோரும் ஒருகணம் விழித்தனர். சிட்டழகு சுதாரித்துக் கொண்டு, "ஆமாங்கய்யா அது ரொம்பப் பெரிய காற்றாடி" என்றாள்.

மற்றவர்களும் 'ஆமாம்' என்று தலையாட்டினார்கள்.

"அதைத் தேட இதுவா நேரம். காலையில் வந்து தேடக் கூடாதா? முதலாளி ஐயாவுக்குத் தெரிஞ்சா தொலைச்சிபுடுவாரு" என்றார் அவர்.

"ஐயா, மன்னிக்கணும். அது நல்ல காற்றாடி. காலைக்குள் அது எங்காவது பறந்து போயிடும். இல்லைன்னா எதிலாவது மாட்டிக் கிழிஞ்சுரும். அதான் இந்த நேரத்தில் வந்தோம்" என்று அடுக்கினான் கிட்டான்.



"இங்கே கிடந்ததுன்னா நான் பார்த்து எடுத்து வைக்கிறேன். காலையில் வந்து வாங்கிட்டுப் போங்க. இப்பப் புறப்படுங்க இங்கிருந்து. இல்லைன்னா என் வேலை போயிடும்."

நல்ல மனிதராய் தெரிந்த அந்த முதியவர், இதமாகப் பேசினார்.

"வேலப்பா" தோட்டத்தின் உள்ளே இருந்து குரல் கேட்டது.

"போயிடுங்க சீக்கிரம். போயிடுங்க இங்கிருந்து" பெரியவர் கிசுகிசுப்பாகச் சொல்லிவிட்டு ஓட்டமும் நடையுமாகப் போனார்.

கார் 'ஸ்டார்ட்' செய்யும் சத்தம் கேட்டது. பெரியவர் கேட்டைத் திறந்தார். அதற்குள் இவர்கள் வேலி ஓரமாக மறைந்தனர்.

கார் விருட்டென பறந்து வெளியே சென்றது. அது சிகப்புப் புள்ளியாய் மறையும் வரை மறைவில் நின்று பார்த்துக் கொண்டிருந்தவர்கள் வெளியே வந்தனர்.

அந்தப் பெரியவர் காவலாளியாக இருக்கலாம். மெயின் கேட் அருகிலேயே ஒரு கல்மீது உட்கார்ந்து இருந்தார்.

அனைவரும் அவர் அருகில் சென்றனர். "ஐயா" என்றான் கிட்டான்.

திடுக்கிட்டுத் திரும்பியவர், "என்ன நீங்கள்லாம் இன்னும் போகலையா?" என்றார்.

"இதோ புறப்பட்டு விட்டோம் ஐயா. கார் முன்னால் போயிருந்தால்தான் உங்க முதலாளி பார்த்திருப்பார். அதனால் வண்டி போன பின்பு போகலாமேன்னு ஒதுங்கி நின்னுட்டோம்" என்றான் கிட்டான்.

"அதுவும் சரிதான்! புறப்படுங்க இப்ப."

"சரிங்க கிளம்பிட்டோம். காற்றாடி கிடந்தால்

எடுத்து வைங்க. மறந்துடாதீங்க'' என்று அப்பாவியாகச் சொன்னான் கிட்டான்.

மற்றவர்கள் வந்த சிரிப்பை அடக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு சைக்கிள்களை எடுக்க ஓடினர்.

கிட்டான் கேட்டான், "ஐயா முதாலளி எங்க போறாரு?"


"மல்லிகைக் கொல்லைக்குன்னு நினைக்கிறேன். அப்படித்தான் பேசிக்கிட்டாங்க. இப்போ உனக்கெதுக்கு அதெல்லாம்? முதல்ல இடத்தைக் காலி பண்ணுங்க."

கிட்டான் நண்பர்களிடம் வந்து சேர்ந்தான்.

"மீண்டும் பண்ணையாரைப் பின்தொடர வேண்டியதுதானா?" என்றான் செந்தில்.

"ஆமாம். மல்லிகைக் கொல்லைக்கு விடுங்க சவாரியை" என்றான் கிட்டான்.

"மல்லிகைக் கொல்லைக்கா? அது அய்யனார் கோயில் பக்கத்திலேல்ல இருக்கு''



கண்ணாடிகளை அறுக்க உதவும் வைர ஊசிகளில் பயன்படுத்தப்படும் வைரங்கள் நகைகள் செய்யப் பயன்படும் வைரங்கள் அல்ல. இந்த வைரங்கள் கறுப்பாகவும் உறுதியாகவும் இருக்கும்.

— பெ. நடராசன்

பயத்தில் நெளிந்தான் உதாரணம்.

"ஆமாண்டா பண்ணையாரை ஃபாலோ பண்ணனும்னா அங்கே தான் போயாகணும். அவர் கார் இப்போ அங்கேதான் போய்க்கிட்டு இருக்கு" கிட்டான் சொன்னான்.

"அதை எப்படி சொல்றே?" என்றாள் சிட்டழகு.

"அந்தப் பெரியவர் சொன்னாரே."

"அதையும் விசாரிச்சிட்டியா?"

"வேற வேலை. சரி விடுங்க சைக்கிளை."

சைக்கிள்கள் பறந்தன காற்றை கிழித்துக் கொண்டு.

"அங்கே போய் என்னடா பண்றது?"

_ உதாரணம் வாய் திறந்தான்.

"அதை அங்கே போய் முடிவு பண்ணலாம், பேசாமல் வாடா" முத்து அதட்டினான்.

இந்த முறை கொஞ்சம் தூரத்திலேயே ஒரு வைக்கோல் போர் அருகில் சைக்கிள்களை நிறுத்திவிட்டு மல்லிகைக் கொல்லை நோக்கி நடந்தனர்.

கொல்லையை ஒட்டி இருந்த அய்யனார் கோயிலில் மங்கலான வெளிச்சம் தெரிந்தது. ஆனால் சிலைகளின் பயமுறுத்தும் முகம் எதுவும் தெரியவில்லை.

கொல்லை வேலியின் படல் அருகே ஒரு வேன் நின்றிருந்தது. அருகிலேயே காரும் நின்றிருந்தது. நாலைந்து பேர் வேனில் கூடைகளை ஏற்றிக் கொண்டிருந்தனர்.

"பூக்கூடை ஏத்துறாங்க" என்றான் உதாரணம்.

அதை இந்த நேரத்தில் இரவில் செய்ய வேண்டியதன் அவசியம் என்ன? என்பது தான் கேள்வி" என்றான் கிட்டான்.

"அதிக நேரம் இங்கே நிற்க முடியாது. அதோ அந்த மரத்தில் ஏறிக் கொண்டுவிடலாம்" என யோசனை தெரிவித்தான் முத்து.

"அது தான் சரி" என்றபடி அனைவரும் மரத்தடிக்குச் சென்றனர். முதலில் முத்து ஏறினான். அடுத்து சிட்டழகைக் கிட்டான் தூக்கி ஏற்றிவிட, முத்து அவளை மேலிருந்து கை கொடுத்து ஏற உதவி செய்தான்.

பிறகு ஒவ்வொருவராய் ஏறி வசதியாகக் கிளையில் அமர்ந்து கொண்டனர்.

வேனில் கூடை ஏற்றும் பணி சுறுசுறுப்பாக நடந்தது. கொஞ்ச நேரத்தில் கொல்லைக்குள் இருந்து பண்ணையாரும் அந்த ஆளும் வந்தனர்.

கிட்டான் "இவன்தான் நான் சொன்ன ஆள்" என்று செந்திலுக்குக் காட்டினான்.

"இவனைப் பார்த்தால் மல்லிகைப் பூ வாங்க வந்த ஆள் மாதிரி தெரியலை. நீ சந்தேகப் படுவது சரிதான்" என்றான் அவன்.

கூடை ஏற்றும் வேலை முடிந்து வேனின் கதவுகள் மூடப்பட்டன. "பார்த்து வாங்கடா" என்று கூறிவிட்டுப் பண்ணையாரும் அந்த ஆளும் தங்கள் காரில் ஏறிப் பறந்தனர்.

வேனும் புறப்படத் தயார் ஆனது. ஆட்கள் கொல்லை கிணற்றில் கைகால் அலம்பிக் கொண்டிருந்தனர்.

''ஐயோ அம்மா'' என்று கத்தியபடியே மரத்தில் இருந்து கீழே விழுந்தாள் சிட்டழகு. பறவைகள் படபடத்து பறந்தன. ஆட்கள் அவளை நோக்கி ஓடிவந்தனர்.

(தொடரும்)

புதிர் உலகம்



I. கந்தன் நான்கு குதிரைகளையும், 12 பசுக்களையும் ரூ. 1600 விலை கொடுத்து வாங்கினான். அவன் குதிரைகளை 15 சதவிகித லாபத்திற்கும், பசுக்களை 20 சதவிகித லாபத்திற்கும் விற்க மொத்த லாபமாக ரூ. 270 பெற்றான். அப்படியானால் ஒரு குதிரையின் விலை என்ன? ஒரு பசுவின் விலை என்ன?

II. ராமுவிடமும் சோமுவிடமும் சில ஆப்பிள் பழங்கள் இருந்தன. ராமு சோமுவிடம், "உன்னிடம் இருக்கும் ஆப்பிள்களில் நான்கு ஆப்பிள்களை எனக்குத் தந்தால் என்னிடம் இருக்கும் ஆப்பிள்களின் எண்ணிக்கை உன்னிடம் இருக்கும் ஆப்பிள்களின் எண்ணிக்கையைப்போல் மூன்று மடங்கு இருக்கும்" என்றான். சோமு ராமுவைப் பார்த்து, "உன்னிடம் இருக்கும் ஆப்பிள்களில் எனக்கு இருபத்தாறு தந்தால், என்னிடம் இருக்கும் ஆப்பிள்களின் எண்ணிக்கை உன்னிடம் இருக்கும் ஆப்பிள்களின் எண்ணிக்கையில் இரண்டு மடங்கு இருக்கும்" என்றான்.

அப்படியானால், அவர்கள் ஒவ்வொருவரிடமும் எத்தனை ஆப்பிள்கள் உள்ளன?

- ப. யோகநாதன்,
கிழக்கு தாம்பரம்,
சென்னை.

III. ஒரு சதுர அறையில் ஒரு மூலையில் கொஞ்சம் எலிகள் உள்ளன. அதில் குறிப்பிட்ட அளவு எலிகளை ஒரு பூனை பிடிக்கிறது. மீதமுள்ள எலிகள் இரண்டாவது மூலையில் இரு மடங்காகவும், மூன்றாவது மூலையில் 3 மடங்காகவும் நான்காவது மூலையில் 4 மடங்காகவும் மாறுகின்றன. பூனை ஒவ்வொரு மூலையிலும் சம அளவு எலிகளைப் பிடித்தது. நான்காவது மூலையில் எல்லா எலிகளையும் பூனை பிடித்துவிட்டால் மொத்தம் எத்தனை எலிகள்? பூனை பிடித்த எலிகள் எத்தனை?

- பெ. நடராசன், ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீசேது மாணிக்கம் உயர்நிலைப்
பள்ளி, மேலச்சீத்தை.

கப்பல் மூழ்காதது ஏன்?

IV. ஒரு பயணி கப்பலில் எல்லா பயணிகளும் தங்கள் உடைமைகளுடன் புறப்பட்டனர். அக் கப்பலில் மேலும் ஏதாவது கூடுதல் எடையை ஏற்றினால் மூழ்கி விடும் நிலை. இருநாள் பயணம் கழித்து கடலில் ஒருவர் தத்தளித்துக் கொண்டு இருந்தார். அவரை ஏற்றினால் கப்பல் மூழ்கி விடும் என்று பயணிகள் பயந்தனர். ஆனால் மாலுமி அவரைக் காப்பாற்றி கப்பலில் ஏற்றிக் கொண்டார். ஆனால் கப்பல் மூழ்கவில்லை. ஏன்?

V. குரு வாங்கிய ரிப்பனின் நீளம் 50 மீட்டர். அதை 50 சம துண்டுகளாக வெட்டினான். ஒரு துண்டினை வெட்ட ஆன நேரம் 2 செகண்டுகள். 50 துண்டுகளை வெட்ட ஆன நேரம் எவ்வளவு?

- ர. யாழினி, ஏழாம் வகுப்பு,
ஸ்ரீசேது மாணிக்கம் உயர்நிலைப்
பள்ளி, மேலச்சீத்தை.

VI. ஒருவருக்கு நான்கு பிள்ளைகள். அந்த நான்கு பேரின் வயதைக் கூட்டினால் 45 வரும்.

மூத்த மகனின் வயதை இரண்டால் வகுத்தாலும் இரண்டாவது மகனின் வயதில் இருந்து இரண்டைக் கழித்தாலும், மூன்றாவது மகனின் வயதுடன் இரண்டைக் கூட்டினாலும், நான்காமவனின் வயதை இரண்டால் பெருக்கினாலும் ஒரே விடையே வரும். அவர்களின் வயதும் தெரியும். நான்கு பேரின் வயதும் தனித்தனியே எவ்வளவு?

- ஆர். குட்டிபிரசன்னா,
காந்தி கிராமம், கரூர்.

விடை 64-ஆம் பக்கம்

உயரத்தை அதிகரிக்க முடியுமா?



● தி.சே. அறிவழகன், திருப்புலிவனம்

? குழந்தைகளுக்கு அடிக்கடி மூக்கிலிருந்து ரத்தம் வடிகிறதே. ஏன் டாக்டர்? அதை நிறுத்த என்ன வழி?

! ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மூக்கிலிருந்து அடிக்கடி ரத்தம் வடிவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது. இதற்குக் காரணம் இவை : 1. அடிக்கடி விரல்களால் நாசித்துளைகளைத் தோண்டிக் கொண்டிருக்கும் பழக்கம். 2. ஜலதோஷம் பிடிப்பது 3. மூக்கில் உள்ள அடினாய்டு சதை வீங்கிப் புண் ஏற்படுதல். 4. மூக்கிலுள்ள சிறிய ரத்தக் குழாய்கள் பலவீனமாக இருத்தல். 5. ரத்தம் உறைவதில் ஏற்படும் கோளாறுகள். 6. மூக்கில் உருவாகும் கட்டிகள். 7. உடலில் ஏற்படும் வேறு சில நோய்கள் 8. மூக்கினுள் பருப்பு, விதை, பேப்பர், குச்சி போன்ற பொருள்களைத் திணித்துவிடுதல். மூக்கிலிருந்து ரத்தம் வடிந்தால் உடனே குழந்தையின் தலையை முன்னால் குனியவைத்து, மூக்கின் நுனியை விரல்களால் அழுத்திப்பிடித்துக் கொள்ளலாம். அப்போது குழந்தையை வாய்வழியாக மூச்சுவிடச் சொல்லலாம். அடுத்து ஐஸ் கட்டியை மூக்கின்மீது வைக்கலாம் அல்லது குளிர்ந்த தண்ணீரில் பஞ்சை நனைத்து, பிழிந்து, அதை மூக்கின்மீது வைக்கலாம். அதனால் மூக்கிலிருக்கும் ரத்தக் குழாய்கள் சுருங்கி ரத்தம் வடிவது நின்றுவிடும். மூக்கில் அடிக்கடி ரத்தம் வடியும் குழந்தைகளுக்குத் தேவையான மருத்துவப் பரிசோதனைகளைச் செய்து, காரணம் அறிந்து சிகிச்சை பெற்றால், மூக்கிலிருந்து மீண்டும் ரத்தம் வடிவதற்கு வாய்ப்பில்லை.

டாக்டர் கு. கணேசன்

● த. இளவரசி, மேலூர்

? பற்களால் ஏற்படும் பல் சொத்தை போன்ற நோய்கள் உடலில் பிற உறுப்புகளைப் பாதிக்குமா?

! பற்களால் ஏற்படும் பல்சொத்தை மற்றும் பல் ஈறு நோய்கள் உடலின் பிற உறுப்புகளை நிச்சயம் பாதிக்கும். குறிப்பாக இதயம், கண், எலும்பு மூட்டுகள், சிறுநீரகங்கள் ஆகியவை பாதிக்கப்படும். சொத்தைப் பல் உள்ளவர்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டு உடல் முழுவதும் அரிப்பு உண்டாகும்.

● ம.அன்புநாதன், கரூர்

? பற்களின் நலம் காக்கும் உணவுகளைப் பற்றிக் கூறுங்கள் டாக்டர்.

! பற்களின் நலம் காக்க கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின் ஏ.டி.சி. அதிகமுள்ள உணவுகளைத் தினமும் சாப்பிட வேண்டும். பால், முட்டை, இறைச்சி, மீன், தயிர், வெண்ணெய், பாலாடை, பச்சையிலைக் காய்கறிகள் ஆகியவற்றில் கால்சியமும் பாஸ்பரஸும் நிறைய உள்ளன. காரட், பப்பாளி, மாம்பழம், மீன் எண்ணெய், பாலில் தயாரிக்கப்பட்ட பொருள்கள், சோளம் ஆகியவற்றில் வைட்டமின் ஏ சத்து அதிகமுள்ளது. காலை வெயிலில்





காற்றுவாங்கிக் கொண்டே நடந்தால் காசு செலவில்லாமல் வைட்டமின் டி சத்து கிடைத்து விடும். ஆரஞ்சு, எலுமிச்சை, தக்காளி, திராட்சை ஆகிய பழங்களில் வைட்டமின் சி சத்து நிரம்பியுள்ளது.

கேட்கட்டுமா டாக்டர்?

பற்களின் தசைகளுக்கும் நரம்புகளுக்கும் பயிற்சி கொடுக்க நார்ச்சத்து மிகுந்த உணவுகளைக் கடித்து, மென்று உண்ண வேண்டும். அவரை, துவரை, பட்டாணி, முழுப்பயறு வகைகள், காரட், கொய்யா, கேப்பை, கோதுமை ஆகியவற்றில் நார்ச்சத்து மிக அதிகம். எந்த உணவையும் உண்டபின்பு வாயையும் பற்களையும் சுத்தம் செய்ய வேண்டும்.

● வே. வள்ளிமணாளன், உடுமலைப் பேட்டை


? உடலின் உயரத்தை அதிகரிக்க தற்போது அறுவை சிகிச்சை வந்துள்ளதாமே?


! உடலின் உயரத்தை அதிகரிக்க மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சைக்கு 'இலிசரோவ் அறுவை சிகிச்சை' என்று பெயர். ரஷ்யாவைச் சேர்ந்த மருத்துவ அறிஞர் இலிசரோவ் கண்டுபிடித்த சிகிச்சை முறை இது. வட்டவடிவ வளையங்களைக் கொண்ட சில கருவிகளைக் காலில் பொருத்தி, சிறு அறுவை சிகிச்சை மூலம் காலின் உயரத்தை 10 செ.மீ. வரை அதிகரிக்கலாம். வளைந்த கால்களையும், கைகளையும் நிமிர்த்தலாம். முறிந்த எலும்புகளை இணைக்கவும் இந்த அறுவை சிகிச்சை உதவுகிறது. இளம்பிள்ளைவாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இது நல்ல பலன் தருகிறது.

● இ.ஜெயஸ்ரீ, ஆத்தூர்

? மனிதப் பற்களுக்கு விஷம் உண்டா, டாக்டர்?

! பாம்புக்கடியில் விஷம் உண்டு. தேள் கடியில் விஷம் உண்டு. ஆனால் மனிதக்கடியில் விஷமில்லை. என்றாலும் மனிதன் கடித்துவிட்டால் அவசியம் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். மனிதனின் வாய்க்குள்ளும் பற்களிலும் நிறைய கிருமிகள் இருக்கும். மனிதன் கடிக்கும் போது காயம் ஏற்படுமல்லவா? அந்தக் காயத்தில் இந்தக் கிருமிகள் நுழைந்து விடும். இதன் விளைவாகக் காயத்தில் வீக்கம், வலி உண்டாகும். காய்ச்சல் வரும். காயத்தைச் சுத்தம் செய்து மருந்து போடத் தவறினால் அதில் 'டெட்டனஸ் கிருமிகள்' நுழைந்துவிட வாய்ப்புண்டு. அப்போது இசிவுநோய் ஏற்படலாம். இது உயிருக்கு ஆபத்து தருகின்ற நோய். இதைத் தவிர்க்கவே 'டெட்டனஸ் டாக்சாய்டு' எனும் தடுப்பூசியைப் போடச் சொல்கிறார்கள்.






சரியான உதாரணம்!

எங்கள் வகுப்பு ஆசிரியர் தமிழ்ப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது "சின்ன உளிதான் பெரிய மலையையே பெயர்க்கும் என்னும் பழமொழிக்கு ஒரு உதாரணம் சொல்லுங்கள்" என்றார். சற்று நேரம் நிசப்தம் நிலவியது. திடீரென்று ஒரு மாணவன் எழுந்து "இரண்டு இமைகளுக்கு இடையே உள்ள சின்ன இடைவெளியிலே தான் இவ்வளவு பெரிய உலகத்தையே பார்க்க முடிகிறது" என்றான். ஆசிரியர் அந்த மாணவனின் சமயோசித புத்தியை வெகுவாகப் பாராட்டினார்.

— எஸ்.பிரசாந்த்,
நெல்லை.

என் பேச்சைக் கேள்

எங்கள் பள்ளி ஆசிரியர் ஒருவர் ஓய்வு





பெற்றார். அவருக்கு நடத்திய பிரிவு உபசார விழாவுக்கு மரியாதை நிமித்தம் அவரது துணைவியாரையும் அழைத்திருந்தோம். அந்த ஆசிரியர் நகைச்சுவை உணர்வுடன் நன்கு பேசக் கூடியவர். அவரது துணைவியார் அவர் அருகில் விழா மேடையில் அமர மறுத்தார். உடனே பள்ளி மாணவர் தலைவன் "வாருங்கள் அம்மா! நீங்கள் சாரோட பேச்சைக் (அருகில் இருந்து) கேட்க வேண்டாமா?" என அழைத்தான். உடனே அந்த ஆசிரியர் தன் துணைவியாரிடம் "பார்த்தாயா! நீ என் பேச்சைக் கேட்பதில்லை என்பது பசங்களுக்குக் கூடத் தெரிந்திருக்கிறது. இன்றாவது என் பேச்சைக் கேள்" என இரு பொருள்படக் கூறியதும் துணைவியார் உட்பட அனைவரும் சிரித்துவிட்டோம்!

— தி.சு.பாலசுப்பிரமணியன்,
பாளையங்கோட்டை

எதனால்?

அறிவியல் பாட வேளையில் எங்கள் ஆசிரியை பழைய வினாத்தாள்களை வைத்துக் கொண்டு மாணவிகளைக் கேள்வி கேட்டார். ஒரு மாணவியிடம் ஆகாய விமானத்தின் எரிபொருள் என்ன?" என்று கேட்டார். அவள் விடை தெரியாததால்

எங்கள்
பள்ளியில்
நடந்தது



இருதிருவென விழித்தாள். உடனே ஆசிரியை 'எத்தனால்'என்று பதிலைச் சொல்லவும் விடை தெரியாத அந்த மாணவி தன்னை ஆசிரியை மீண்டும் கேள்வி கேட்பதாக நினைத்து "எதனாலன்னு தெரியல டீச்சர்" என்று பரிதாபமாகச் சொல்ல வகுப்பே சிரித்தது!

— எஸ். துர்கா காத்யாயனி,
பத்தாம் வகுப்பு, புனித அலாய்சியஸ்
மகளிர் மேல்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி.

பாற்கடலில்...

எங்கள் தமிழாசிரியர் சிலேடையாகப்

பாற்கடலில் சீனிவாசன்!

பேசுவதில் கைதேர்ந்தவர். ஒருமுறை எங்கள் பள்ளியில் வேலை செய்யும் உதவியாளர் வழக்கம்போல ஒரு தம்ளர் பால் கொண்டு வந்து தமிழாசியருக்குக் கொடுத்தார். அதை வாங்கிய தமிழாசிரியர் பாலைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டார். உடனே உதவியாளர், "என்ன ஐயா! பாலைக் குடிக்காமல் கும்பிட்டுக் கொண்டிருக்கிறீர்களே?'' என்றார். அதற்குத் தமிழாசிரியர், "பாற்கடலில் சீனிவாசன் பள்ளி கொண்டுள்ளான். அதுதான் கும்பிடுகிறேன்!" என்றார். நாங்கள் எல்லாரும் ஒன்றும் புரியாமல் விழிக்கவே தமிழாசிரியரே அதற்கான



விளக்கத்தைப் போட்டு உடைத்தார். "பாற்கடலிலே அதாவது பாலிலே, 'சீனிவாசன்' அதாவது சீனியிலே வாசம் செய்யும் எறும்பு மிதக்கிறது என்பதைத்தான் பாற்கடலிலே சீனிவாசன் பள்ளி கொண்டுள்ளான் என மறைமுகமாகச் சுட்டிக்காட்டினேன்" என்று சொன்னதும் அந்தச் சிரிப்பலையில் வகுப்பறையே குலுங்கியது.

— பிரசன்னா,
கரூர்.

உறக்கம் ஏன்?

ஆங்கில பாடவேளை நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் இலக்கணம் எடுத்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு மாணவன் பாடத்தைக் கவனிக்காமல் உறங்கிக் கொண்டு இருந்தான். இதைக் கவனித்த ஆசிரியர் "ஏன்டா உறங்கறே? நேற்று ராத்திரி கடலில் தீ பிடிச்சுது. அதை அணைக்க நீ போனாயாக்கும்?'' என்று கேட்டார். அதற்கு அந்த மாணவன் "இல்ல சார், மணலில் தான் தீ பிடிச்சுது. அதைத் தான் நான் அணைக்கப் போனேன்" என்றான். வகுப்பறையே சிரிப்பலையில் மூழ்கியது. ஆசிரியர் அவனிடம் 'நான் இனி வகுப்பில் உறங்கமாட்டேன்' என்று 100 தடவை எழுதி வரச் சொன்னார்.

- ரா.சிந்துகுமார்,
பதினோராம் வகுப்பு,
எஸ்.வி.எம்.
உயர்நிலைப்
பள்ளி,
மண்டைக்காடு



உள்ளேன் ஐயா!

அன்று தமிழ்ப் பாட வேளை. எங்கள் தமிழாசிரியரை நாங்கள் அய்யா என்றுதான் அழைக்க வேண்டும். இலக்கணம் நடத்தி முடித்துவிட்டு வருகைப் பதிவேடு எடுத்தார். தமிழ் வகுப்பில் மட்டும் "உள்ளேன் ஐயா" என்றுதான் சொல்ல வேண்டும். அப்போது முரளி என்ற மாணவன் தூங்கிக் கொண்டிருந்தான். 'முரளி' என ஐயா கூப்பிட்டதும் ஒரு மாணவன் "கனவுலகில் உள்ளான் ஐயா" என்றதும், மாணவர்கள் சிரித்துவிட்டனர். முரளியை எழுப்பி பெஞ்ச் மீது நிற்க வைத்து விட்டார் ஆசிரியர்.

- அ. அருண்குமார்,
ஏழாம் வகுப்பு, ஸ்ரீ ராமலிங்கர்
உயர்நிலைப் பள்ளி, கடலூர்.

நொடிக்கு நொடி வளர்ந்த மீன்!

பிரம்மா நித்திரை செய்து கொண்டிருந்தார். அவர் முகத்திலிருந்து வேதங்கள் வெளிப்பட்டன. அருகிலிருந்த சோமுகன் என்ற அசுரன் வேதங்களைக் கொண்டு போய் கடலில் ஒளித்துவிட்டான். நித்திரை கலைந்து எழுந்த பிரம்மா வேதங்களைக் காணாமல் திருமாலிடம் முறையிட்டார்.

ஸ்ரீஹரி பிரம்மாண்டமான மீனாக உருவெடுத்து கடலுக்குள் சென்று அசுரனைக் கொன்று வேதங்களை மீட்டு நான்முகனிடம் கொடுத்தார். நான்முகன் வேதங்களைச் சொல்லித் தரும்படி வேண்ட அன்னமாக மாறி வேதங்களைப் பிரம்மாவுக்கு உபதேசித்தார்.


சத்தியவிரதன் என்ற ராஜரிஷி நீரையே ஆகாரமாகக் கொண்டு தவம் செய்தார். ஒருநாள் கிருதமாலா நதியிலே இறங்கி சூரியனுக்கு அர்க்கியம் விடும்போது தண்ணீரை வாரிய கைகளில் ஒரு மீன் இருந்தது. அதைத் தண்ணீரில் விடும்போது அந்த மீன் "ராஜரிஷி! பெரிய மீன்கள் சிறிய மீன்களை விழுங்கிவிடும். என்னைக் காப்பாற்ற மாட்டாயா?" என்று கேட்டது.

பேசும் இந்த மீன் சாதாரணமானதல்ல என்று சத்தியவிரதன் புரிந்து கொண்டார். அந்த மீனைக் கமண்டலத்திலேயே போட்டுக் கொண்டு குடிலுக்குத் திரும்பினார்.

மறுநாள் காலையில் கமண்டலத்து மீனைத் தொட்டியில் போடலாம் என்று பார்த்தால் மீன் கமண்டலத்தில் திரும்ப முடியாமல் வளர்ந்திருந்தது. சத்தியவிரதனிடம் அந்த மீன் "சத்தியவிரதா! இந்தக் கமண்டலம் எனக்குப் போதவில்லை. பெரிய இடத்தில் என்னை விடு" என்றது. சத்தியவிரதன் பெரிய பாத்திரத்தில் நீர் நிரப்பி அதில் மீனை விட்டார்.

சத்தியவிரதன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மீன் பெரியதாகிக் கொண்டு வந்தது. மீன் தன்னை ஒரு குளத்திலே விடும்படி கூறியது. அப்படியே செய்தார் சத்தியவிரதன். குளமும் அதற்குப் போதவில்லை. மடுவில் கொண்டு போய் விட்டார். மடுவிலும் திரும்ப முடியாமல்





ஆர்.பொன்னம்மாள்

பெரியதாகிவிட்டது.

சமுத்திரத்துக்கே அதை எடுத்துச் சென்றுவிட்டார் சத்தியவிரதன். ''ராஜரிஷி! என்னை விட்டுப் போகிறாயா? திமிங்கிலங்கள் என்னை உண்டு விடுமே'' என்று மீன் கேட்டது.

''தாங்கள் மகாசக்தி; விநாடிக்கு விநாடி வளரும் நீங்கள் இந்தச் சமுத்திரத்தையே விழுங்கக் கூடியவர். முன்னர் மச்சமாகி சோமுகனிடமிருந்து வேதங்களை மீட்ட திருமாலாகவே தங்களை எண்ணுகிறேன். இப்படி பிரம்மாண்டமாக வளரவேண்டிய அவசியத்தைத் தெரிந்து கொள்ள ஆசைப் படுகின்றேன். அருள வேண்டும்'' என்று வேண்டினார் சத்தியவிரதன்.

''சத்தியவிரதா! நீ நினைத்தது சரிதான். இன்றைக்கு ஏழாம் நாள் பெரும் பிரளயத்தால் பூவுலகைக் கடல் ஆக்கிரமித்துக் கொள்ளும். அப்போது நீரிலே ஒரு ஓடம் மிதந்து வரும். அதில் சப்தரிஷிகளும்

சகல ஔஷதங்களுடன் வீற்றிருப்பர். நீயும் அந்த ஓடத்திலேறி என்னை தியானித்த படி சஞ்சரித்து வரவும். சூறாவளிக் காற்றாலும், கொட்டும் மழையாலும் ஓடம் பயங்கரமாக ஆடும். அஞ்சாதே! அப்போது நான் தோன்றுவேன். என் தலையில் படகை இழுத்துக் கட்டு. அப்போதுதான் பிரளயம் முடியும் வரை படகு கவிழாது." என்று கூறி விட்டு நீருள் மீன் மறைந்தது.

சத்தியவிரதனுக்கு பிரமிப்பும், சந்தோஷமும் மனதை நிறைத்துக் கொண்டது. படகில் நாமும் பகவான் அருளுடன் பயணிக்கப் போகிறோம் என்பதில் அளவிட முடியாத மகிழ்ச்சி. சத்தியவிரதன் கடவுளை தியானித்தபடி நின்றார். கடற்கரையை விட்டு அகலவேயில்லை.

ஏழாவது நாள் மழை பெய்ய ஆரம்பித்தது. கூடவே காற்று. நேரமாக ஆக இரண்டும் வலுத்தன. சமுத்திர அலைகள் பயங்கரமாய் எழும்பின. நிலப்பகுதியைக் கடல் விழுங்கியது. எங்கும் ஜலமயம். நின்று கொண்டிருந்த சத்தியவிரதனின் வாய் வரை கடல் நீர் ஓடியது. தூரத்தில் ஓடம் வருவதைப் பார்த்தார் சத்தியவிரதன்.

சப்தரிஷிகளும் அவனுக்குக் கை கொடுத்து ஓடத்திலேற்றினர். ஓடம் பயங்கரமாக ஆட ஆரம்பித்தது. "ஓம் நமோ நாராயணா" என்று அனைவரும் பிரார்த்தித்தனர்.

அப்போது எட்டு லட்சம் மைல் நீளமுள்ள, கோடி சூரியப் பிரகாசத்தோடு அந்த மீன் தலையில் நீண்ட கொம்புடன் ஓடத்தருகே வந்தது. பகவான் சொன்னபடி ஓடத்தை இழுத்து மீனின் கொம்பில் கட்டினார் சத்தியவிரதன். பிரளயம் முடியும் வரை ஓடத்தை இழுத்துக் கொண்டே சுற்றினார் மச்சாவதாரமாக வந்த ஸ்ரீஹரி. சத்தியவிரதனுக்கு மத்ஸ்ய புராணத்தையும், ஆன்மீக அறிவையும் உபதேசித்தார். அயக்கிரீவன் என்ற அசுரனைத் தன் கூரிய கொம்பால்குத்திக் கொன்றார். அதனால் விஷ்ணுவுக்கு ஹயக்கிரீவர் என்ற பெயர் ஏற்பட்டது.

புதிர் உலகம் விடைகள் :

I. குதிரை விலை ரூ. 250
பசு விலை ரூ. 50

II. ராமு : 50
சோமு : 22

III. மொத்த எலிகள் : 41; பூனைப் பிடித்தது - 24. 41-24=17X2=34-24= 10X3=30-24=6X4=24-24=0.

IV. அவர்கள் புறப்படும்போது மேலும் எடை ஏற்ற இயலாத நிலை இருந்தாலும், இரண்டு நாள் பயணத்தில் கொண்டு வந்த உணவின் எடை குறைந்து இருந்ததால், கப்பல் மூழ்கவில்லை.

V. 98 செகண்டுகள்.

VI. முறையே நால்வரின் வயது : 20; 12; [illegible]

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 மி	ன்	2 சா	ர	ம்	■	மை	கு	3 [illegible]
ன்	■	ர	■	ம	■	று	■	[illegible]
மி	■	ண	■	ர்	■	ற்	■	[illegible]
னி	■	ர்	யி	4 த	■	5 வே	ம்	[illegible]
■	■	■	■	■	■	■	■	■
6 இ	னா	ம்	■	7 க	ப	டி	■	[illegible]
ரு	■	ட	■	ணி	■	றா	■	[illegible]
ம்	■	தி	■	த	■	ற்	■	[illegible]
பு	ம்	8 சோ	■	ம்	ர	9 கா	டி	10 [illegible]



அடுத்த இதழில்
விறுவிறுப்பான புதிய
சித்திரத் தொடர் ஆரம்பம்
மாலா தேடிய
மாயப்பெண்
கதை : விஜி
படம் : சேகர்



நாவில் நீர் ஊறியது!

✉ பா. நரேஷ்குமார், ஆற்காடு "கோகுலத்துக்கு இதுவே நான் எழுதும் முதல் கடிதம். நூலகத்திற்குச் சென்று புத்தகங்களைப் படிப்பது என் வழக்கம். அன்றும் அதே போல் படிக்கச் சென்ற போது கோகுலம் என் கண்ணில் பட்டது. உடனே எடுத்து, பிரித்துப் படித்தேன். எனக்குப் பிடித்த பல பகுதிகள் கோகுலத்தில் இருப்பது கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். ஒன்பதாம் வகுப்பு வரை இந்தக் கோகுலத்தைப் பற்றி அறியாதது நினைத்து மனம் வருந்தினேன். கோகுலத்துக்குப் 'பொக்கிஷம்' என்றும் இன்னொரு பெயர் வைத்து விடலாம்!" என்கிறார்.

✉ "மூன்று சோதனைகள் என்ற படக் கதையின் மூலம் முதியவர்களை ஒதுக்கி விடக்கூடாது என்ற கருத்து மருத நாட்டு அரசனுக்கு மட்டுமல்ல; எல்லோருக்குமே புரிந்துவிட்டது. மாண்புமிகு மரத்தில் தலைவர்களின் படங்கள் அருமை" என் கிறார் எஸ். அமீர் ஜான், நல்லூர்.

✉ எல். வசந்தி, நாகூர் "விடுமுறைக்காகக் கொடுக்கப்பட்ட கணிதப் புதிர்கள், செய்து பாருங்கள், விளையாட்டுகள் மிகவும் சுவாரசியமாகவே இருந்தன. அதிலும் 'பறக்கும் பட்சி' எங்கள் தெருவுக்கே பிரபலமாகிவிட்டது" என்கிறார்.

✉ "ஐஸ்கிரீம் தயாரிக்க இவ்வளவு வேலைகள், வழிமுறைகள் இருப்பது எனக்கு இப்பொழுதுதான் தெரிந்தது. வண்ணப் படங்களைப் பார்த்ததும் நாவில் நீர் ஊறியது" என்கிறார் என். சரவணன், மேட்டூர்.

✉ "கிட்டப்பா குழியில் விழுந்தான் என் பதைப் படிக்கும்போது சிரிப்பை அடக்க முடியவில்லை. குழி, குவி லென்சுகளில் இனி பிரச்னை வராது. நல்ல உதாரணம். நினைவாற்றலைப் பரிசோதிக்கும் படமும் ரசிக்கும்படியாக இருந்தது. ஆனால் என்னால்தான் ஆறு கேள்விகளுக்கும் சரியாகப் பதில் அளிக்க முடிய வில்லை" என்கிறார் எஸ். கீதா, அருப்புக் கோட்டை.

✉ பா. சுரேந்தர், காட்டுமன்னார் கோவில் "'இவர்கள் என்ன செய்கிறார்கள்?' நடுப் பக்கப் புதிரைப் பார்த்ததும் மிக வும் சுலபம் என்று நினைத்தேன். பிறகு ஒவ்வொன்றாகக் கண்டு பிடிக்கும்போதுதான் கஷ்டம் தெரிந்தது. மாவு அரைப்பதிலும், தண்ணீர் அடிப்பதிலும் தவறு செய்து விட்டேன். தும்பி படங்கள் நன்றாக இருந்தன" என்கிறார்.

கோகுலம் சுழல் கோப்பை

கோகுலம் இதழ்களில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப்பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் கோகுலம் ஆறாவது இதழ் வெளி வந்துவிட்டது. இன்னும் ஆறு இதழ்களே உள்ளன. கோப்பைக்காகப் போட்டியிடும் பள்ளி மாணவ, மாணவியர் தங்கள் படைப்புகளை அனுப்பி வைப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.



சின்ன ஆசை!!

வரதன் மிகவும் சோம்பேறி. உழைக்காமல் உண்டு வாழ ஆசைப் பட்டான். அவ்வூரில் எவரும் அவனுக்கு உதவ மறுத்துவிட்டனர்.

மனம் வருந்திய வரதன் ஒரு மரத்தடியில் அமர்ந்து கண்மூடி தவம் செய்ய ஆரம்பித்தான்.

வரதனின் புலம்பல் அதிகமாவதை விரும்பா மல் தேவலோகத்திலிருந்து ஒரு தேவதூதர் அவன் முன் தோன்றினார். ''வரதா, எதற்காக தவம் செய்து அழைத்தாய்?'' என்று கேட்டார்.

கண் விழித்த வரதன் பரவசமானான். வணங்கினான். பிறகு ''சின்ன ஆசை நிறைவேற எனக்கு ஒரு வரம் தாங்கள் அருள வேண்டும்'' என்றான்.

''என்ன வேண்டுமோ கேள்'' -தேவதூதர்.

''நான் கஷ்டப்படாமல் இருக்க எனக்கு நிறைய பணம் வேண்டும். இங்கு ஒரு ரூபாய் என்றால் தேவலோகத்தில் எவ்வளவு ரூபாய்?'' - என்றான் வரதன்.

''ஒரு கோடி ரூபாய் வரதா''

''சரி, எனக்கு இங்குள்ள மதிப்பில் ஒரு கோடி ரூபாய் தந்து அருளுங்கள்'' - வரதன்.

'அடப்பாவி! இது சின்ன ஆசையா? ஆசைக்கும் ஒரு அளவு வேண்டாமா?' என்று நினைத்த தேவதூதர் ''இந்த வரத்தைத் தருவதற்கு முன் எனக்கு ஒரு வேலை இருக்கிறது. அதை முடித்து விட்டு வருகிறேன்'' என்று கிளம்பினார்.

''தேவதூதரே எவ்வளவு நேரத்தில் திரும்பி வருவீர்கள்?'' என்றான் வரதன்.

''ஐந்து நிமிடத்தில் வருகிறேன்'' என்ற தேவதூதர் மறைந்தார்.

பாவம் வரதன்! ஐந்து நிமிடம் என்பது தேவலோகத்தில் 500 கோடி நிமிடம் என்று தெரியாமல் காத்துக் கொண்டிருக்கிறான்.

- எஸ். அமீர்ஜான், பதினோராம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி, நல்லூர்,
திருவண்ணாமலை மாவட்டம்



டென்னிஸில் எல்லோராலும்

இன்றைக்கு நாம் ஆடும் டென்னிஸ் ஆட்டத்துக்குப் பிள்ளையார் சுழி போடப் பட்டது கிட்டத்தட்ட 550 வருடங்களுக்கு முன்னர் என்பது ஒரு ஆச்சர்ய மான செய்தி. ஃபிரான்ஸ் தேசத்து மன்னர்கள் குடும்பத்தினர் மற்றும் கனவான்கள் ஆடும் ஆட்டமாகவே துவங்கி யதுதான் டென்னிஸ். பிரெஞ்சு மொழியில் முதலில் வைக்கப் பட்ட பெயர் Jeydepaume. கைகளால் ஆடப்படும் விளையாட்டு என்பதைக் குறிக் கும் சொல் இது. துணியினால் செய் யப்பட்ட பந்தால்தான் முதலில் ஆடி னார்கள். துணிப்பந்து தரையில் பட்டு மீண்டும் உயராது என்பதால் காற்று வெளியிலேயே ஆட்டக்காரர்களி டையே பந்து பரிமாறிக்கொள்ளப்பட்டது. பந்து செய்வதற்கான லினன் துணி எகிப்தி லிருந்து வரவழைக்கப்பட்டதாம்!

முதலாம் ஜேம்ஸ் மன்னர் அரச கட மையை மறந்து விட்டு சதா டென்னிஸ் ஆட்ட களத்திலேயே நேரம் செலவழித் தார். இதனால் வெறுப்படைந்த மக்கள் ஆட்ட களத்திலேயே அவரைக் கொன்று விட்டார்கள். 'சாமான்யர்கள் டென்னிஸ் விளையாடக் கூடாதென்று' தடை விதித்த வர் பத்தாவது லூயிஸ் மன்னர். "இந்த ஆட்டம் அரச குடும்பத்தினருக்கு மட் டுமே" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட் டார் அவர். இவரது காலத்தில்தான் டென்னிஸ் ராக்கெட் இப்போதுள்ள வடி வத்தில் உருவாக்கப்பட்டது. பிரெஞ்சில் Tenez என்று பெயர் சூட்டப்பட்டது. பதி னாறாம் நூற்றாண்டில் இங்கிலாந்து அரச குடும்பத்தினரிடையே இந்த ஆட்டம் அறிமுகமாகியது. ஹாமில்டன் அரண் மனையில் ஆடுகளம் உருவாக்கப்பட்டது. அந்த ஆட்டகளம் இன்றளவும் அற்புத மாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

1873ம் ஆண்டு இந்தியா வில் பணியாற்றிய மேஜர் வால்டர் கிளிப்டன் என்ற ராணுவ அதிகாரி நவீன டென்னிஸ் ஆட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார். மெல்போர்ன் கிரிக்கெட் கிளப், டென்னிஸ் ஆட்டத்துக்கான விதி முறைகளை வகுத்துத் தந்தது. 1876ம் ஆண்டு அட்லாண்டிக்கைக் கடந்து அமெரிக்காவிலும் அறிமுகம் ஆனது டென்னிஸ். "துவக்கும் போது எப்படி உயர் வகுப்பு மக்களுக்கு மட்டுமே சொந்த மான ஆட்டமாக இருந்ததோ, அதே நிலை தான் இன்று வரை தொடர்கிறது என்று கூடச் சொல்லலாம். காரணம் இது ரொம்ப காஸ்ட்லியான ஆட்டமாகப் போய்விட்டது. ராக்கெட், ஷூக்கள், தலை யில் போடும் தொப்பி உட்பட எல்லாமே அதிக விலை. நடுத்தர மற்றும் கீழ்தட்டு

மக்கள் இன்னமும் 'பார்க்கக்' கூடிய ஆட்டமாகவே இருக்கிறது டென்னிஸ்" என்கிறார் டென்னிஸ் பயிற்சியாளரான டி.தாமஸ். இந்திய விளையாட்டு ஆணை யத்தால் தமிழகத்துக்குப் பயிற்சியாளராக அனுப்பப்பட்டிருப்பவர்.

டென்னிஸ் பயிற்சியில் மொத்தம் ஐந்து கட்டங்கள் இருக்கின்றன. கத்துக் குட்டி, துவக்க நிலை, இடைநிலை, முன் னேறிய நிலை, போட்டித்தரம் ஆகிய கட் டங்கள்தான் இவை. முதல் நான்கு கட்டங் களைத் தாண்டிய பிறகு, ஐந்தாவது நிலை யில் கடுமையான பயிற்சியில் ஈடுபட வேண்டும். தங்கள் குழந்தைகள் டென்னிஸில் சிறந்து

ஜொலிக்க முடியுமா?


விளங்க வேண்டுமென்று பெற் றோர்கள் கருதினால் ஆறு அல்லது ஏழு வயதில் குழந்தைகளுக்குப் பயிற்சி யைத் துவக்க வேண்டும். முதலில் வாரத் துக்கு மூன்று நாட்கள் என்று துவங்கும் பயிற்சி, ஒவ்வொரு நிலையையும் கடக்கும் போது, நான்கு, ஐந்து நாட்கள் என்று தொடரும். இறுதி கட்டத்துக்கு வரும் போது வாரத்தின் ஏழு நாட்களும் பிராக் டீஸ் செய்தால்தான் போட்டிகளில் வெற்றிக்கொடி நாட்ட முடியும். நமது தென்னிந்திய தட்பவெட்ப நிலையைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் டென் னிஸ் பயிற்சிக்குச் சரியான நேரம் காலை ஆறிலிருந்து ஏழுமணி வரை என்று சொல்லலாம். அதே போல் மாலை ஐந்திலிருந்து ஆறு.

முதலில் ராக்கெட்டைப் பிடித்துக் கொள்வது எப்படி, பிடிமானம் எப்படி இருக்க வேண்டும், பந்தை அடிக்கும்போது ராக்கெட்டை வீசுவது எப்படி, ஃபுட் வொர்க் (footwork) எப்படி இருக்க வேண் டும், ஆடுகளத்தில் விரைவான மூவ் மெண்ட் எப்படி மேற்கொள்வது போன்றவைதான் பயிற்சியின் தொடக்க பாட திட்டங்கள். நல்ல ஆட்டக்காரராக வருவதற்கு கடுமையான பயிற்சியில் ஈடுபட வேண்டும். கோர்ட்டில் எத்தனை மணி நேரம் ஆடுகிறோம் என்பதல்ல; எப் படி ஆடுகிறோம் என்பதுதான் முக்கியம். ஒரு சிறுவனைத் தொழில் ரீதியாக டென் னிஸ் ஆட்டக்காரராக உருவாக்க வேண் டும் என்று நினைக்கும்போது நீங்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டியது அந்தக் குழந்தைக்கு டென்னிஸில் ஆர்வ மிருக்கிறதா என்பதைத்தான். அப்படி இல்லாவிடில் இந்த விளையாட்டில் திணிப்பது பயன் தராது.

டென்னிஸ் ஆட்ட களம் என்பது 78 அடி நீளமும் 36 அடி அகலமும் கொண்டது. பக்கத்துக்கு இரண்டு வீரர்கள் ஆடும்போதுதான் கோர்ட்டின் அகலம் 36அடி. அதுவே ஒரு ஆட்டக்காரர் மட்டும் ஆடும் 'சிங்கிள்ஸ்' ஆட்டத்தில் கோர்ட்டின் அகலம் 27 அடியாகச் சுருக்கப்படும். போட்டி என் பது மூன்று ஆட்டத் தொகுதியைக் கொண்டது. அதில் இரண்டில் வெற்றி பெறுபவர் வின்னர். ஒவ்வொரு ஆட்டக் காரரும் எதிர் ஆட்டக்காரருக்கு மூன்று சர்வீஸ்கள் போடலாம். பதினைந்து, முப்பது, நாற்பது என்ற எண்ணிக்கையின் அடிப்படையில் ஸ்கோர் கணக்கிடப்படு கிறது. இந்த ஸ்கோரிங் முறை கடிகார ஓட் டத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு வரப்பட்டது என்கிறார்கள்.

சர்வதேச அளவில் ஆறு டென்னிஸ் போட்டிகள் நடக்கின்றன. விம்பிள்டன், யு.எஸ். ஓபன், ஃபிரெஞ்ச் ஓபன், ஆஸ்தி ரேலிய ஓபன், டேவிஸ் கப், ஃபெடரேஷன் கப் ஆகியவைதாம் அவை. இவற்றில் மிகச் சிறப்பாகக் கருதப்படுவது விம்பிள் டன்தான். டேவிஸ் கப் ஆண்களுக்காக வும், ஃபெடரேஷன் கப் பெண்களுக் காகவும் நடத்தப்படுகிறது. இது தவிர ஒலிம்பிக்ஸ், ஆசியப் போட்டிகளிலும் டென்னிஸ் உண்டு. இந்த ஆறு போட்டி களில் நான்கில் வென்றவரை Grandslam





• தாமஸ்

வென்றவர் என்கிறார்கள். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ராட் லீவர் என்பவர் 1960களில் இரு முறை Grandslam ஆக சிகரம் கண்டவர். இவரது சாதனையை இதுவரை யாரும் தொட முடியவில்லை. நமது நாட்டைச் சேர்ந்த ராமநாதன் கிருஷ்ணன், ரமேஷ் கிருஷ்ணன், லியாண்டர் பயஸ் ஆகியோர் விம்பிள்டன் ஜூனியர் அளவில் வென்றாலும் சீனியர் அளவில் சாதனை படைக்கவில்லை. 1924ல் இந்தியாவைச் சேர்ந்த முகமது சலீமுக்கும் அமெரிக்காவைச் சேர்ந்த ரிச்சர்ட் வின்சென்ட் ஆகியோருக்குமிடையே நடந்த போட்டி டென்னிஸ் சரித்திரத்தில் மிக விறுவிறுப்பான போட்டியாக இன்று வரை கருதப்படுகிறது. இதில் மூன்றுக்கு இரண்டு என்ற கணக்கில் வென்றவர் வின்சென்ட். சர்வதேச அளவில் இன்று சிறப்பான ஆட்டக்காரராகக் கருதப்படுபவர் லேடன் ஹெவிட். மகளிர் மட்டத்தில் ஜெனிஃபர் கேப்ரியாடி, மார்டினா ஹிங்கிஸ் ஆகியோர் பேசப்படுகிறார்கள். இந்தியாவிலும் சிறப்பான ஆட்டக்காரர்கள் இருக்கிறார்கள். லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி, முஸ்தாபா கவுஸ், ரோஹன் பூபண்ணா, விஜயகண்ணா, சிவகுமார் செப்பையா ஆகியோர் நமது நம்பிக்கை நட்சத்திரங்கள். பெண்களில் நிருபமா, சாய் ஜெயலட்சுமி, ரோஷினி ஆகியோர் பளிச்சிடுகிறார்கள்.

"தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு நிறுவனம் சார்பாக நுங்கம்பாக்கம் டென்னிஸ் ஸ்டேடியத்தில் மிகச் சகாயமான மாதாந்திர கட்டணத்தில் டென்னிஸ் பயிற்சி அளிக்கப்படுகிறது. முதல்வர் ஜெயலலிதாவின் முந்தைய ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட இந்த ஸ்டேடியம் ஆசியாவிலேயே மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஆர்வம் காரணமாக பயிற்சி பெற வரும் நடுத்தர குடும்பத்து குழந்தைகள், பணக்கார குடும்ப குழந்தைகள் அணியும் உயர்தர ஷூ, வைத்திருக்கும் காஸ்ட்லி ராக்கெட், போட்டிருக்கும் டீஷர்ட் ஆகியவற்றைப் பார்த்து, ஒரு வித தாழ்வு மனப்பான்மையில் மிரண்டு ஒதுங்கிப் போய் விடுகிறார்கள். அரசு இவற்றை வசதியில்லாதவர்களுக்கு இலவசமாக கொடுக்க முன்வந்தால் நிறைய திறமைசாலிகளை அடையாளம் காண முடியும். இது தவிர சம்மரில் ஆர்வத்துடன் வரும் சிறுவர், சிறுமியர் பள்ளி திறந்தவுடன் நின்று விடுகிறார்கள். அப்படியும் வரும் சிலர் பரீட்சையின் போது காணாமல் போய்விடுகிறார்கள். இப்படி பார்க்கும் போது வருடம் முழுவதும் பயிற்சி எடுப்பவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். இந்த நிலை மாற வேண்டும். ஆர்வத்துடன் ஆடுகளத்தில் புகும் ஒரு சிறுவன் விடாமுயற்சியுடன் பயிற்சியைத் தொடர்ந்தால் தொழில் ரீதியாக வெற்றிகரமான டென்னிஸ் ஆட்டக்காரராக உருவாக முடியும். அப்படிப்பட்ட சிறுவர், சிறுமியரைத்தான் நாங்கள் தேடிக் கொண்டிருக்கிறோம்'' என்கிறார் தாமஸ்.

— ப்ரியன்

படங்கள்: ஈஸ்ரஜன்

GOKULAM GO (ES) KARTING

- an exciting report on the gala event conducted by gokulam





The Asian 'KICK-OFF'

– Cover story on the much awaited 'world' event

Resurgence of Ancient Medicine

– insight column featuring Ayurveda

RIDDLES, PUZZLES, INDOOR GAMES, STORIES, PICTURE STORIES

Gokulam wears a new look from July!

Look out for the announcements regarding the 'Happy Birthday' special!

GOKULAM

The monthly magazine for children

JUNE 2002 **Rs.6/- ONLY**

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097



ஆறுதல் பரிசு
ரா.ப்ரஷாந்த்,
ஐந்தாம் வகுப்பு,
ஜவஹர் வித்யாலயா, சென்னை



மியாவ்... மியாவ்...

ஓவியப் போட்டி முடிவுகள்

முதல் பரிசு
பி. ஜெயசந்திரிகா,
அசோம், சென்னை





இரண்டாம் பரிசு
எல். சேகர்,
திருச்சி.

மூன்றாம் பரிசு
ரா. விஷால்,
ஏழாம் வகுப்பு,
ஜவஹர் வித்யாலயா,
சென்னை.

மே இதழில் 'பூனை' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். வந்து குவிந்த பூனைகளில் ஐந்து பேர் வரைந்த பூனைகள் பரிசு பெற்று இங்கு காட்சி தருகின்றன.



சி.டி. இலக்கியா,
பத்தாம் வகுப்பு, தூய ஜோசப்
மெட்ரிகுலேஷன் பள்ளி,
கோவை.

மாலதி

மாயன் ஊர் ஊராய் உஞ்ச விருத்தி எடுத்து உண்டு க்ஷேத்ராடனம் செய்தான். சிறுகாவூருக்கு வந்ததும் காய்ச்சல் வந்ததால் ஒரு வாரம் அந்த ஊரில் தங்கும்படியாயிற்று. அந்த ஊர் மக்கள் அப்பாவிகள். சூதுவாது அறியாத பரோபகாரிகள். மாயனை அக்கறையாகக் கவனித்து கஷாயமும், கஞ்சியும் கொடுத்து காப்பாற்றினார்கள். உடல் குணமானதும் அவனை அங்கேயே தங்கும்படி கேட்டுக் கொண்டனர்.


அவனும் ஜாதகம், ஜோசியம் என்று அவ்வூரிலேயே வசதியாக வாழ்ந்தான். ஒரு வருடமாயிற்று. மாயனுக்குப் பணக்காரனாக ஆசை வந்தது.

ஒரு நாள் அவ்வூர் நாட்டாண்மைக்காரரை அழைத்து, "ஐயா! நான் சிவபக்தன் என்பதை நீங்கள் அறிவீர்கள்! இவ்வூர் மக்களுக்காக நான் தினமும் சிவனை ஆராதித்து வந்தேன். நேற்று சிவபெருமான் என் கனவில் தோன்றி, 'மாயா! உன்னைக் காப்பாற்றி வாழவைத்த சிறுகாவூர் மக்களைச் சிவகணங்களாக ஏற்றுக் கொள்ள இருக்கிறேன். தினமும் எண்ணற்ற ஜீவன்கள் இங்கு வருவதால் அடையாளம் வேண்டும். இந்த சிறுகாவூர் மக்களின் கையில் ஒரு சீட்டு எழுதி அனுப்பு. இந்த ஊர் மக்கள் உனக்குக் கடன்பட்டிருக்கிறார்கள். அதனால் மடிந்த ஒவ்வொரு உயிருக்கும் இரண்டு பவுன் வசூலித்துக் கொள். சீட்டில்லாமல் வருபவர்கள் கைலாயத்துக்குள் நுழைய முடியாது. தட்சணை கொடுக்காமல் வரும் உயிர் அனாதையாகப் பூலோகத்தில் மீண்டும் பிறவி எடுக்கும். இரு பவுன் கொடுத்தவர்கள் சிவலோகத்தை அடைந்தார்கள் என்பதற்கடையாளமாக எரித்த சாம்பலில் ஒரு ருத்ராட்ச மணி கிடைக்கும்' என்றார்" என்று கூறினான்.

மாயனின் இந்தக் கனவு சிறுகாவூர் பூராவும் பரவியது. ஜனங்கள் மாயனிடம் மிகுந்த மரியாதையும், பக்தியும் காட்டினார்கள். 'சிவபெருமானைக் கனவில் கண்ட மகான்' என்று போற்றினர்.

வெளியூர் போய் நிறைய ருத்தராட்சங்கள் வாங்கிப் பதுக்கி இருந்தான் மாயன்.

இறந்தவர் கையில் 'இவர் சிறுகாவூர் பிரஜை. இவரைக் கைலாசத்தில் சேர்த்துக் கொண்டு சிவகணமாக்கவும்' என்று எழுதிய சீட்டை மாயனிடமிருந்து வாங்கிக் கட்டுவார்கள். மறுநாள் சாம்பலைக் கிளறும் போது ருத்ராட்சம் கிடைக்கும். மகிழ்வார்கள்.



மாயன் செல்வந்தனானான். மாடி வீடு கட்டிக் கொண்டான். திருமணம் செய்து கொண்டு

குழந்தைளோடு செளக்கியமாக வாழ்ந் தான்.

ஒரு நாள் அவ்வூரில் வீட்டு வேலை பார்க்கும் குப்பம்மாவின் புருஷன் இறந்து விட்டான். தன் புருஷன் எப்படியாவது கைலாசத்துக்குப் போக வேண்டுமென்று ஆசைப்பட்டு ஒப்பாரி வைத்தாள் குப் பம்மா.

அவள்மீது இரக்கப்பட்டு நிதி வசூ லித்தனர். அவ்வூர் சத்திரத்தில் தங்கி இருந்த வியாபாரி "எதற்கு நிதி?" என்று விசாரித்தான். அவ்வூர் மக்களின் அறி யாமையைப் போக்க எண்ணி அறி வுரை கூறியதில் அடி விழுந்ததுதான் மிச்சம்! மௌனமாகப் பணம் கொடுத் தான்.

அன்றிரவு கறுப்பு உடையில் மயா னத்தில் ஒளிந்திருந்தான் வியாபாரி.



கைலாசத்துக்குக் கடிதம்!

மாயன் ஊர் ஓசை அடங்கிய பிறகு ருத் ராட்சத்தை அஸ்திக்குள் வைப்பதைப் பார்த்தான்.


ஒரு ஓலையில் 'சிறுகாவூர் மாயனுக்கு, கைலாயத்தில் இட நெருக்கடி தாள வில்லை. அதோடு உன் கடனும் முடிந்து விட்டது. உன்னை நேரில் பார்த்து அது பற்றிப் பேச வேண்டும். தாமதியாமல் உடனே புறப்பட்டு வா.


இப்படிக்கு கைலாசபதி'

என்று எழுதி ஓலையைச் சுருட்டி அரக்கு முத்திரையிட்டு, அதில் தன் கழுத் திலிருந்த ருத்ராட்சத்தைப் பதித்து அஸ்திக்குள் வைத்து, அங்கிருந்த ருத்ராட் சத்தை எடுத்து வந்துவிட்டான் வியாபாரி.

மறுநாள் அஸ்தி எடுக்கப் போனவர் கள் ஓலைச் சுருளை எடுத்து வந்து நாட் டாண்மைக்காரரிடம் கொடுத்தனர். அவர் அரக்கு முத்திரையை நீக்கி அதி லிருப்பதை ஊர் மக்களுக்குப் படித்துக் காட்டினார். மாயனும் அங்கிருந்தான். ஓலை வாசகத்தைக் கேட்டுத் திடுக்கிட் டான்.

அநியாயமும், அக்கிரமும் எத்தனை நாள் செல்லுபடியாகும்? ஊர் மக்கள் கைலாசத்துக்கு சீக்கிரம் போகும்படி மாயனை வற்புறுத்தினர். இரவோடிரவாக மாயன் பெண்டு பிள்ளைகளுடன் ஊரைவிட்டே ஓடிப்போனான்.


அம்மா சொல்லைத் தட்டாதே!
கதை: க. சௌம்யாமணி, படம்: மகேஷ்
காட்டில் மான்கள் மேய்ந்து கொண்டிருந்தன.
அம்மா, அங்கே பார். கொஞ்ச தூரத்தில் பச்சையாக நிறையப் புல் தெரிகிறது.
அங்கெல்லாம நிறையப் புதர்கள் இருக்கும். ஓநாய் மறைந்திருக்கும். பேசாமல் சீக்கிரம் சாப்பிடு.
இங்கே என்ன இருக்கு? எல்லாம் காய்ந்து போய்விட்டது. அங்கே போனால் பச்சையாகச் சாப்பிடலாம் அம்மா.
உனக்கு விவரம் தெரியாது. அதெல்லாம் ஆபத்து நிறைந்த இடம். புரிஞ்சுக்க.
சே! இந்த அம்மா ரொம்ப மோசம். ஓநாய் வந்தால் ஓடி வந்துவிட வேண்டியதுதானே! இந்தக் காய்ந்த புல்லைத் தின்னு வாய் வலிக்குது.
குட்டிகளா சீக்கிரம் வாங்க, போகலாம்.
அம்மா என்னைக் கவனிக்கலை, மெதுவாகக் கிளம்பிட வேண்டியதுதான்.
குட்டிமான் புல்லைச் சாப்பிட்டது.
ஆஹா! என்ன ருசி!
எனக்கு இன்னிக்கு அதிர்ஷ்டம். மான்குட்டி தானாக வந்து மாட்டிக்கிட்டதே!
மரத்தின் மேல் அமர்ந்திருந்த ஒரு குரங்கு மானையும் ஓநாயையும் கவனித்தது.
அடடா! மான் குட்டி இப்படி அநியாயமாக மாட்டிக் கொண்டதே! எப்படியாவது காப்பாத்தணும்!


உடனே மரத்திலிருந்து கீழே குதித்தது குரங்கு. சத்தம் கேட்டு மானும் ஓநாயும் திரும்பிப் பார்த்தன.
யார் முகத்தில் விழித்தேனோ! மான்கறியோடு குரங்குக் கறியும் சாப்பிடலாம் போலிருக்கே!
மீண்டும் மரத்தில் அமர்ந்தது குரங்கு –
ஐயோ... அம்மா சொன்னது போல் ஓநாய் வந்து விட்டதே! இப்ப என்ன பண்றது?
ஓநாய் அண்ணே! என்ன இங்கே சுத்திட்டு இருக்கே?! உனக்கு விஷயம் தெரியாதா?
என்ன விஷயம்?
பக்கத்து கிராமத்துக்குள் ஒரு ஓநாய் நுழைந்து ஆடு, மாடுகளைக் கொன்று விட்டதாம்.
அதுக்கென்ன இப்ப?
அதனால கிராம மக்கள் ஓநாய்களை வேட்டை யாட கூட்டமாகக் காட்டுக்குள் நுழைந் திருக்காங்க. விஷயம் தெரிந்த ஓநாய்கள் காட்டின் உட்பகுதிக்குச் சென்று பதுங்கி விட்டன.
நல்லவேளை. என் உயிரைக் காப்பாற்றினே! நானும் போய் ஒளிஞ்சுக்கறேன்.
சீக்கிரம் கிளம்பு... வந்துடப் போறாங்க...
ஓநாய் பயந்து கொண்டு ஓடியது. குரங்கு மான் குட்டியை அதன் அம்மாவிடம் ஒப்படைத்தது.



கோகுலம் நியூஸ்

ஐந்து கிரகங்கள் காட்சி!

ஏப்ரல் நடுப்பகுதியிலிருந்து மே மாதம் நடுப்பகுதி வரை செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய ஐந்து கிரகங்களும் அருகருகில் இருந்தபடி வான வீதியில் ஒளி வீசின. அமெரிக்காவில் மாலைப் பொழுதில் மேற்குப் பகுதியில் வெறும் கண்களாலேயே இதைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. இனி 2040 வரை இப்படி ஒரு காட்சியைக் காண முடியாது. ஐந்து கிரகங்களும் நல்ல பிரகாசத்துடன் அருகருகில் தெரிந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

24 லட்சம்!

ஹவாய் தீவு அருகே கடலில் மூழ்கிக் கொண்டிருந்த கப்பலில் ஒரு நாய் மட்டும் தனியாகத் தவித்துக் கொண்டிருந்தது. அக்கப்பலில் இருந்த ஊழியர்களை வேறொரு கப்பல் மீட்டது. நாயை மட்டும் அவர்கள் விட்டுவிட்டனர். இதை அறிந்த பிராணிகள் பிரியர்கள் மீட்புப் படையினருடன் நாயை மீட்க கடலுக்குச் சென்றனர். நாயை மீட்பதற்கு மட்டும் ஆன செலவு 24 லட்சம் ரூபாய்!

ஏலம்

1865ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார் அமெரிக்க முன்னாள் அதிபர் ஆபிரகாம் லிங்கன். அதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு வெள்ளை மாளிகையில் அவர் ஆற்றிய உரை 12 பக்க கையெழுத்துப் பிரதியாக இருந்தது. இந்தக் கையெழுத்துப் பிரதி 14.88 கோடிக்கு ஏலம் போனது. இதுவரை அமெரிக்காவில் ஏலம் போன வரலாற்று ஆவணங்களில் இதுதான் அதிகபட்சத் தொகையாகும்.

விண்வெளியைச் சுற்றிய முட்டைகள்

சீனாவிலிருந்து ஷென் சூ-3 ஆளில்லாத விண்கலத்தில் ஒன்பது கோழி முட்டைகளை வைத்து அனுப்பினர். ஒரு வார விண்வெளிப் பயணத்தின்போது அந்த விண்கலம் 108 முறை பூமியைச் சுற்றியது. வெற்றிகரமாக பயணத்தை முடித்துக் கொண்டு மங்கோலியாவில் தரையிறங்கியது விண்கலம். பூமிக்குத் திரும்பிய ஒரு வாரத்துக்குப் பின் பெய்ஜிங்கில் உள்ள பல்கலைக் கழக சோதனைக் கூடத்தில் மூன்று கோழிக் குஞ்சுகள் பிறந்தன. முட்டையாக விண்வெளிப் பயணம் மேற்கொண்டு பூமியில் பிறந்துள்ள கோழிக் குஞ்சுகளுக்கு அதன் காரணமாக உடல் ரீதியாக மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்று ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மிகப் பெரிய பலூன்

இங்கிலாந்தில் இருந்து ஹாலந்து நாட்டுக்கு கேமரான் என்பவர் உலகிலேயே மிகப் பெரிய பலூனில் பயணம் தொடங்கினார். அந்த பலூனில் சூடான காற்று நிரப்பப்பட்டிருந்தது. 20 மாடிக் கட்டடம் அளவுக்கு இது உயரமானது. இது போன்ற பலூனில் இதற்கு முன்னர் யாரும் பயணம் மேற் கொண்டதில்லை. இது 10,000 அடி உயரத்தில் பறந்தது. 4 கார்களுக்கு இணையான எடையைத் தூக்கிச் செல்லக் கூடியது.








ஒவ்வொன்றும் ரூ.500/- மதிப்புள்ள 2 கைக்கடிகாரங்கள் பரிசு!

இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். பெற்றோர் கையொப்பம் முகவரி கூப்பன் இல்லாத படிவங்களை ஏற்றுக் கொள்ள இயலாது. சரியான விடை அளித்தவர்களில் குலுக்கல் முறையில் இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். கடைசி தேதி **20.6.2002**. உங்கள் பள்ளி, வீட்டு முகவரிகளை மறவாமல் குறிப்பிடவும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

இந்த மாதப் போட்டி

இங்கு பிரபலமான 6 பேர்களின் புகைப்படங்கள் உள்ளன. கீழே ஆறு விருதுகள் கொடுக்கப்பட்டுள்ளன. எந்த விருது யாருக்குக் கிடைத்துள்ளது என்பதைச் சரியாகக் கண்டுபிடித்து எழுதுவதுதான் போட்டி.

1. செவாலியே ____
2. பாரதரத்னா ____
3. அர்ஜுனா ____
4. நோபல் ____
5. மகசேசே ____
6. தாதா சாஹேப் பால்கே ____

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97.

செய்து பாருங்கள்



முட்டை ஓடு எங்கே?

உங்களால் முட்டையின் ஓடை உடைக்காமல், எடுத்துவிட முடியுமா?

எப்படி செய்வது?

- ஒரு வேக வைக்காத முட்டையை எடுத்துக் கொள்ளுங்கள்.
- முட்டையை ஒரு தம்ளரில் போட்டு, அது மூழ்கும்வரை வினிகரை விடுங்கள்.
- ஒரு நாள் கழித்து முட்டையை மெதுவாக எடுத்துப் பாருங்கள். என்ன உணருகிறீர்கள்? மீண்டும் முட்டையை தம்ளருக்குள் போட்டு விட்டு மூன்று, நான்கு நாட்கள் கழித்து எடுத்துப் பாருங்கள். என்ன தெரிகிறது? முட்டையின் ஓடைக் காணவில்லையா? எப்படி?

துள்ளும் முட்டை

- வேக வைத்த முட்டையை ஒரு தம்ளருக்குள் போடுங்கள்.
- வினிகரை முட்டை மூழ்கும் வரை ஊற்றுங்கள்.
- இரண்டு நாட்கள் கழித்து முட்டையை எடுத்துப் பாருங்கள். எப்படி இருக்கிறது? மீண்டும் தம்ளருக்குள் முட்டையைப் போட்டு விட்டு ஓரிரு நாட்கள் காத்திருங்கள். மறுபடியும் முட்டையை வெளியில் எடுத்து சமையல் அறை தொட்டிக்குச் செல்லுங்கள். தொட்டிக்குள் முட்டையைப் போடுங்கள். அது எவ்வளவு தூரம் துள்ளிக் குதிக்கிறது என்பதைப் பாருங்கள்.



மிதக்கும் முட்டை


வேக வைக்காத முட்டையை எடுத்து தண்ணீர் நிரம்பிய கண்ணாடி தம்ளருக்குள் போடுங்கள். பிறகு ஒரு கரண்டி உப்பை அதில் போடுங்கள். மூழ்கியிருந்த முட்டை இப்போது மிதக்க ஆரம்பித்துவிட்டதல்லவா?

என்ன காரணம்?


முட்டையின் ஓடு கால்சியத்தால் ஆனது. வினிகர் ஒரு ஆசிட். முட்டையின் ஓடை இந்த ஆசிட் கரைத்து விடுவதால் முட்டை ஓடிழந்து காட்சியளிக்கிறது. வேக வைக்கப்பட்ட முட்டையில் ஓடு கரைந்தாலும் முட்டையின் உட்பகுதி வெந்து கட்டியாக இருப்பதால் தூக்கிப் போடும்போது துள்ளிக் குதிக்கிறது. சாதாரண தண்ணீரில் மூழ்கும் முட்டை உப்புத் தண்ணீரில் மிதப்பது அதன் அடர்த்தி அதிகம் என்பதால்தான்.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

குளத்திலிருக்கும் தாய் வாத்தை அடைய குஞ்சுக்கு வழி காட்டுங்கள்!



இதில் மாறுபட்டது எது?



விடை : 7. மற்ற பொருட்கள் எல்லாம் கண்ணாடியால் ஆனவை.

இங்கு என்னென்ன பொருட்கள் ஒளிந்துள்ளன?



விடை : 1.ஸ்குரு ட்ரைவர் 2.உதடு 3.கத்தரிக்கோல் 4. வீடு 5. பறவை 6. கதவு 7. சுத்தம் செய்யும் பிரஷ்





மணி : யார் வீட்ல?

ரகு : என்னங்க வேணும்?

மணி : வணக்கம்ங்க!

ரகு : வணக்கமெல்லாம் இங்கு இல்லை. வேறு எங்கேயாவது கேட்டுப் பாருங்க.

- த.சங்கர், பதினோராம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, நல்லூர்.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2002*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

